விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 083 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (12.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே


### மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட
# இராணுவத்தினருக்கு ஏன் தண்டனை வழங்கவில்லை
## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி

(ஜெனிவா)
மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு தண்டனை வழங்காதமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கை இராணுவம் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்
### ஐ.நாவின் குற்றச்சாட்டை நிராகரித்த இலங்கை




(ஜெனிவா)
இலங்கை இராணுவ அதிகாரிகள் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது என 19

## வவுனியாவில் தீப்பந்த போராட்டம்



(வவுனியா)
மின்கட்டண உயர்வைக் கண்டித்து வவுனியாவில் அரசுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நேற்றிரவு தீப்பந்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

### இந்திய கடன் திட்டத்தின் கீழ்
# 7 அத்தியாவசிய மருந்துகள்
## நாட்டுக்கு கிடைத்தன

(கொழும்பு)
இந்திய கடன் திட்டத்தின் கீழ் 7 வகையான அத்தியாவசிய மருந்துகள் 19


கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மகநாயக்க தேரரைச் சந்தித்து கலந்துரையாடியபோது...

# தேர்தலுக்கான நிதியை வழங்குங்கள்
## தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் கோரிக்கை



(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான நிதியை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை ஒத்திவைத்து ஜனநாயகத்தை சீர்குலைக்காதீர்
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கண்டி)
தேர்தலை ஒத்திவைத்து ஜனநாயகத்தை சீர்குலைக்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார். 19

### 'வடக்கின் பெரும் போர்'
## மத்திய கல்லூரி வெற்றி


04

## மருத்துவ பீட மாணவன் வவுனியாவில் மரணம்



(வவுனியா)
வவுனியாவில் விபரீத முடிவெடுத்த மருத்துவபீட மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.
இதில் செந்தில்காந்தன் 19

### மது விருந்தில் தாம் செய்த திருட்டை
## பெருமை பேசிய இருவர் பொலிஸாரால் கைது

(திருநெல்வேலி)
மது விருந்தில் தாம் செய்த திருட்டை பற்றி பெருமையாக பேசி இருவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டுள்ளனர்.
அண்மையில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,
திருநெல்வேலி 19

## யாழில் காற்று மாசு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் காற்று மாசடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த காற்றின் தரம் 155 ஆக பதிவாகியுள்ளது.
(03ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

கொக்குவிலில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள பெண் வேலையாள் தேவை. சம்பளம் (15,000-30,000)

தொடர்புக்கு :- **077 950 7546** (C-6144)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 43 வயது எழுத்து எழுதி தடைப் பட்ட மணமகனுக்கு மண மகள் தேவை.

தொடர்புகளுக்கு :-

**077 905 8615** (வைபர் & வாட்ஸ்அப்) (14870)

## நாகபூஷணி திருமண சேவை

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.** (C-5649)

**021 222 9306, 077 138 7596**
**071 999 9306**

## காணி விற்பனைக்கு

### உடுவில்

உடுவில் டச் வீதியில், உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து 500 M தொலைவில் (14865)

வீட்டுடன் காணி விற்பனைக் குண்டு **8 பரப்பு**

**077 632 0376** தரகர் தேவையில்லை

## விரைவில் சிங்களம் பேச...

குறைந்த கட்டணத்தில் நான்கு மாதத்தில் சிங்களம் தெளிவாக பேசலாம். இன்றே இணையுங்கள். (14575)

**077 065 2181**
**070 403 5735**
2023

## முகாமையாளர் தேவை

எமது தளபாட நிறுவனத்திற்கு முகாமையாளர் தேவை. A/L கணக்கீடு படித்த ஆண்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : **ஆர்க் தளபாட நிலையம்,**
இல. 35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பஸ்டிப்போ அருகாமை) (14868)

**T.P : 077 300 1763 | 021 221 9909**

## காணி விற்பனைக்கு

ரவி கராஜ் அருகாமை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (14796)

தொடர்புகளுக்கு

**077 656 3582**

## விற்பனைக்கு



பாடசாலை மாணவர்களுக்கான (Socks) காலுறைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (C-6143)

**ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்**
**இல. 303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.** **076 315 6470**

## காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒன்று மற்றும் இரண்டு பரப்புக் காணிகள் விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (14796)

தொடர்புகளுக்கு

**077 656 3582**

## மரண அறிவித்தல்



### ஏரம்பு வேல்முருகு (கந்தசாமி)

வவுனியா மதவாச்சியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் சித்தம் பதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு வேல்முருகு கடந்த செவ்வாய்க் கிழமை (07.03.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு - அரசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லையா - லக்ஷ்மிபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், மகாதேவியின் அன்புக் கணவரும், விஜிதாயினி (லண்டன்), வனிதாயினி (கனடா), அசோக்காந், அனுஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவண்ணன் (கனடா), தனலக்ஷ்மி ஆகியோரின் மாமனாரும், கௌதம், சந்தியா, லக்ஷியா, ஓவியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(14851) தகவல் : குடும்பத்தினர்

உ
திருச்சிற்றம்பலம்

## சிவப்பேறு குறித்த அறிவித்தல்

சிவபூமியில்
24
-
06
-
1934



சிவபுரத்தில்
07
-
03
-
2023

### திருமதி. தெய்வேந்திரராணி வேலாயுதர்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி, கலாவேவா (இலங்கை), வெலிங்டன் நியூசிலாந்து, சிட்னி (துங்காவி) அவுஸ்திரேலியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தெய்வேந்திரராணி வேலாயுதர் அவர்கள் செவ்வாய்க்கிழமை (07.03.2023) அன்று சிட்னியில் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் (வாத்தியார்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சரவணமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. வேலாயுதர் சரவணமுத்துவின் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும், பவானி, காலஞ்சென்ற சாந்தினி, யசோதினி, சிவகுமார், நந்தினி மற்றும் பாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம், தர்மகுலசிங்கம், யோகராஜா (விக்டர்), ஜெயதேவி, இந்திரன், நந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், கிரிசாந்தி, பாத்திபன், கீர்த்திகன், ஏஞ்சலா, அஸ்வினி, ஆருனி, சேந்தன், சுவேதா, ஆரூரன், அஜந்தன், நிஷங்கா, முகுந்தன், ஸ்டெவி, அருன், மெதுலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நவீனா, ஐஸ்வின், யோசான், ஜொகான் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற சற்குணபூபதி, மோகனலீலா, சௌந்தரலீலாவதி, தர்மலிங்கம், யோகாம்பிகை, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணேசு, குணரட்ணம் மற்றும் சுப்ரமணியம், புஸ்பராணி, காலஞ் சென்றவர்களான விமலாம்பிகை, பாலசிங்கம், அன்னமுத்து, இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், வீரகத்தி, செல்வரத்தினம் ஆகியோரின் சகலியுமாவார்.

அம்மாவின் பூதவுடல் புதன்கிழமை (15.03.2023) அன்று மக்கள் பார்வைக்காக இல.86, ராகோ வீதி, கிரவீனில் மாலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணிவரை வைக்கப்பட்டு பின்னர் வியாழக்கிழமை (16.03.2023) பிற்பகல் 1.00 மணியளவில் மிஞ்சன்பெரி வடக்கு வழிபாட்டு இடத்தில் சிவப்பேற்று வழிபாடுகள் ஆரம்பமாகி மாலை 3.00 மணியளவில் பூதவுடல் தீயினில் சங்கமமாக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

Viewing : 15th March 2023 6.00 PM to 8.00 PM at 86 Targo Road, Girraween, NSW 2145. Cremation: 16th March 2023 1.00 PM to 3.00 PM at Pinegrove Memorial Park, North Chapel, Kington Street, Minchinbury NSW 2770.

அறிவிப்பவர்: பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.
தகவல் : நந்தன் - மருமகன் +61 413 895 294 (C-6141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு

# அடிப்படை சம்பளத்தை மாத்திரம் செலுத்துவது பொருத்தமானது

## தேர்தல்கள் ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள அரச பணியாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தை மாத்திரம் செலுத்துவது பொருத்தமானதாக அமையும் என தேர்தல்கள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.**

கடந்த 9 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு திகதியிடப்பட்டிருந்தது. இருப்பினும், அது பின்னர் பிற்போடப்பட்டது.

இதன்படி, அன்றைய தினத்தில் இருந்து தேர்தல் தாமதமடையும் காலம் வரை அரச சேவையாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தை மாத்திரம் செலுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரை தொடர்பில் அமைச்சரவை தீர்மானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மூன்று ஆயிரம் அரச பணியாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதற்காக அவர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேர்தல் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டுள்ளமையுடன் பொருளாதார நெருக்கடி காரணமாக அவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (4)

# தேர்தலை தற்போது நடத்துவது ஜனநாயகம் அல்ல- மனுச



(கொழும்பு)

"நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்ததன் பின்னரே எந்தத் தேர்தலையும் நடத்துவோம். தற்போதைய நிலையில் தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல. அரசமைப்பு, சட்டம் என்பனவற்றை விட நாட்டு மக்களின் உயிர் வாழும் உரிமைக்கே நாம் முன்னுரிமை வழங்குவோம்." இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

"தற்போதைய நெருக்கடியான நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தினால் அரசியல் கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

பொருளாதாரப் பாதிப்பு மீண்டும் தீவிரமடையும் என்பதை எதிர்த்தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தேர்தலுக்கு நாங்கள் பயப்படவில்லை. ஆனால், தற்போது தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டதன் பின்னரே எந்தத் தேர்தலையும் நாம் நடத்துவோம். அரசமைப்பு, சட்டம் ஆகியவற்றை விடவும் நாட்டு மக்களின் உயிர் வாழும் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை அரசு செயற்படுத்துகின்றது எனத் தெரிவித்தார். (4)

# கொழும்பை வந்தடைந்த அதிசொகுசு கப்பல்



(கொழும்பு)

அதி சொகுசு பயணிகள் கப்பலான 'பிரின்சஸ் குரூஸ்' கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

குறித்த கப்பலில் 1894 சுற்றுலா பயணிகள் மற்றும் 906 பணியாளர்களுடன் வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் இருந்து வந்த சுற்றுலாப் பயணிகளில் 159 பேர் கொழும்பு துறைமுகத்தை வருகை தந்தவுடன், நாட்டில் கண்டி, பின்னவல, நீர்கொழும்பு, இங்கிரிய ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

இதேவேளை, குறித்த கப்பல் நேற்று இரவு துபாய் துறைமுகத்திற்கு புறப்பட்டது. (4)

# முடிந்தால் நீதிபதிகளை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரணை நடத்தி பாருங்கள்

## அநுரகுமார திஸாநாயக்க சவால்

(கொழும்பு)

உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பினர் முன்வைத்துள்ள சிறப்புரிமை மீறல் பிரேரணை முற்றிலும் தவறானது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இதற்கமைய, முடிந்தால் நீதிபதிகளை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரணை நடத்தி பாருங்கள் என்றும் அதன் பின்னர் நிகழ்வதை தாம் பார்த்துக் கொள்வதாகவும் அவர் சவால் விடுத்துள்ளார்.

இந்நிலையில் வரவு-செலவு திட்டத்தின் ஊடாக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியை நிறைவேற்றுத்துறை கட்டுப்படுத்தியமை காரணமாகவே நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அரசியல் அதிகாரம் நீதிமன்றத்துக்கு பிரயோகிக்கப்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

இதுவரை நிதி கிடைக்காததால்

# தபால் மூல வாக்குச் சீட்டை உரிய திகதிக்குள் அச்சிட

## அரச அச்சகம் தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான பணம் இல்லாத காரணத்தினால் தபால் மூல வாக்குச் சீட்டை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கு செலவாகும் பணம் இதுவரை செலுத்தப்படாததால், அதற்கான பணிகளைத் தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அரசாங்க அச்சக அலுவலகத்தின் பிரதானி தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்களை அச்சிட 152 மில்லியனும் ஊழியர்களின் கொடுப்பனவிற்காக 52 மில்லியன் ரூபாவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் இதுவரை தம்மால் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து பணிகளுக்கும் 40 மில்லியன் மட்டுமே திறைசேரியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# நாட்டில் முக்கிய சில பகுதியில் காற்று மாசு

(கொழும்பு)

இலங்கையின் சில பகுதிகளில் நேற்று காலை காற்றின் தரம் குறைவடைந்துள்ளது. அதன்படி நேற்று காலை 11 மணி நிலவரப்படி கொழும்பில் காற்றின் தரக் குறியீட்டு மதிப்பு 152 ஆக பதிவாகியுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தால் நிறுவப்பட்ட காற்றின் தர கண்காணிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் காற்றின் தர தொழில்நுட்ப நிறுவனமான IQAir இன் புள்ளி விபரங்கள் படி யாழ்ப்பாணத்தில் காற்றின் தரம் 155 ஆக பதிவாகியுள்ளமையை வெளிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் நுவரெலியா, நீர்கொழும்பு, தம்புள்ளை, அம்பலாந்தோட்டை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா பகுதிகளில் காற்றின் தரம் மிதமான மட்டத்தில் காணப்பட்டதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

காற்றின் மாசு சுட்டெண் 100 இற்கும் அதிகமாக இருந்தால், சிறுவர், முதியோர் மற்றும் சுவாசக்கோளாறு உடையோருக்கு ஆபத்தானது எனவும் அவ்வாறானவர்கள் முகக்கவசம் அணிவது பாதுகாப்பானது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 116 ஆவது வடக்கின் போர்

# மகுடம் சூடியது மத்திய கல்லூரி






யாழ். மத்திய கல்லூரிமைதானத்தில் நேற்று சனிக்கிழமை நிறைவடைந்த யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான 116 ஆவது வடக்கின் போர் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இந்த போட்டியில் துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் அபரிமிதமாக பிரகாசித்த யாழ். மத்திய கல்லூரி வடக்கின் சமரில் தனது 29 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

ஜெகதீஸ்வரன் விதுஷன், நிஷாந்தன் அஜய், மதீஸ்வரன் சன்சயன், கடைநிலை துடுப்பாட்ட வீரர் சுதர்ஷன் அனுஷாந்த் ஆகியோர் முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் வெளிப்படுத்திய ஆற்றல்களும் ரஞ்சிதகுமார் நியூட்டன், ஆனந்தன் கஜன், விக்னேஸ்வரன் பருதி ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சுகளும் யாழ். மத்திய கல்லூரியின் வெற்றியில் முக்கிய பங்காற்றின.

போட்டியின் கடைசி நாளான நேற்றைய தினம் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு மேலும் 15 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற அழுத்தத்துக்கு மத்தியில் தனது 2 ஆவது இன்னிங்ஸை 7 விக்கெட் இழப்பு 138 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த சென் ஜோன்ஸ் கல்லூரி 160 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது கடைசி விக்கெட்டை இழந்தது.

அருள்சீலன் கவிஷான் 22 ஓட்டங்களுடனும் யோகதாஸ் விதுஷன் 12 ஓட்டங்களுடனும் கடைசி நாள் ஆட்டத்தை அழுத்தத்துக்கு மத்தியில் தொடர்ந்தனர்.

யோகதாஸ் விதுஷன் அதே எண்ணிக்கையில் ஆட்டமிழந்த போதிலும் கடைநிலை ஆட்டக்காரர்களுடன் இணைந்து கவிஷான் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி சென் ஜோன்ஸின் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தார்.

அவர் கடைசியாக 37 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த போது யாழ். மத்திய கல்லூரியின் வெற்றிக்கு 9 ஓட்டங்களே தேவைப்பட்டது.



பந்துவீச்சில் ரஞ்சிதகுமார் நியூட்டன் 53 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் விக்னேஸ்வரன் பருதி 58 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

9 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி 2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி ஒரு விக்கெட்டை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

ஆட்டநாயகனாக ரஞ்சித்குமார் நியூட்டன், சிறந்த துடுப்பாட்ட வீரராக நிஷாந்தன் அஜய், சிறந்த பந்துவீச்சாளராக விக்னேஸ்வரன் பருதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4-33)

# திருமண பந்தத்தில் இணைந்தார் வனிந்து



இலங்கையின் டைனமிக் ஓல்ரவுண்டர் வனிந்து ஹசரங்க தனது நீண்டகால காதலியான விந்தியாவை கடந்த 9 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டார்.

நீண்டகால காதலியான வனிந்து ஹசரங்க மனைவி, விந்தியா பற்றி அதிகம் எதுவும் தெரியவில்லை. சமூக வலைத்தளங்களிலோ அல்லது வேறு எங்கும் அவரைப் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை.

வனிந்துவின் இன்ஸ்டாகிராம் பதிவின் படி, இருவரும் திருமணம் செய்து கொண்டனர் . தனது புதிதாக திருமணமான மனைவியுடன் இருக்கும் படத்தை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டார். (4)

# நியூஸிலாந்து அணிக்கெதிரான முதல் டெஸ்ட்

# 3 ஆம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை 83-3



இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 83 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது ஆட்டநேர முடிவில், அஞ்சலோ மத்தியூஸ் 20 ஓட்டங்களுடனும் பிரபாத் ஜயசூரிய 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தற்போது இலங்கை கிரிக்கெட் அணி நியூஸிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், 65 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

கிறிஸ்ட்சர்ச். மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதல் இன்னிங்ஸிற்காக 355 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 373 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனையடுத்து 18 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய, இலங்கை அணி, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 83 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் நான்காம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி இன்று தொடரவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சை பெறாமல் நடமாடும் 6000 காச நோயாளர்கள்

## சுகாதார மேம்பாட்டு பணியகம்

(கொழும்பு)

**நாட்டில் சுமார் 5000 - 6000 காச நோயாளர்கள் தமக்கு காச நோய் இருப்பதை கண்டறியாமல் சிகிச்சை பெறாமலிருக்கின்றனர். இவர்கள் சமூகத்தில் ஏனையோருக்கும் காச நோயை பரப்புபவர்களாகக் காணப்படுகின்றமையால் இன்று காச நோய் இலங்கையில் பிரதான பொது சுகாதார பிரச்சினையாக மாறியுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காச நோய் என்பது சுவாசத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டதாகும். பக்ற்றீரியா தொற்றின் மூலம் ஏற்படும் இந் நோயை ஆரம்ப கட்டத்திலேயே இனங்கண்டு, முறையான சிகிச்சைகள் வழங்கப்பட்டால் அதனை முழுமையாகக் குணப்படுத்த முடியும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டுக்கமைய 13 500 புதிய காச நோயாளர்கள் இனங் காணப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் 7000 - 9000 காச நோயாளர்களே இனங் காணப்படுகின்றனர்.

இதன் அர்த்தம் 5000 - 6000 காச நோயாளர்கள் தமக்கு காச நோய் இருப்பதை அறியாது, சிகிச்சை பெறாமலுள்ளனர் என்பதாகும்.


மார்ச் 24 ஆம் திகதி சர்வதேச காச நோய் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

"2035 இல் காச நோயற்ற நாடாக இலங்கையை மாற்றியமைப்போம்" என்ற தொனிப் பொருளின் கீழ் சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றமடைவது சிக்கல்

## அமெ.பேராசிரியர் தகவல்

(வோஷிங்டன்)



தேவையான மாற்றங்கள் நிகழாத வரை இலங்கையின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படாது என அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் அவசியம். இல்லையெனில் கிடைக்கவுள்ள சர்வதேச நாணய நிதி பிணையெடுப்பு, இலங்கையின் பொருளாதார்த்துக்கு உதவுவது சந்தேகம் ஆகும்.

எனவே நீண்டகால கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான முயற்சியில், இலங்கையில் நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் தேவை.

இலங்கையில் உயர்மட்ட அரசியலில் உள்ள பெரும்பாலான ஆளுமைகள் பல ஆண்டுகளாக இருந்ததைப் போலவே இன்றும் உள்ளனர்.

கடந்த 1965 ஆம் ஆண்டு முதல் 16 தடவைகளாக, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை பெற்றுக் கொண்டது. எனினும் அவை அனைத்தும் தோல்வியடைந்தன.

பிணையெடுப்பை எதிர்பார்ப்பது தற்காலிக நிவாரணத்தை மாத்திரமே கிடைக்கச் செய்யும். எனினும் நீண்டகாலத்திற்கு இது உதவாது என தெரிவித்துள்ளார். (4)

# இரு குழுக்களிடையே மோதல் ஒருவர் பலி, இருவர் காயம்

(கண்டி)

கண்டி, தவுலகல ஹந்தஸ்ஸ பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹந்தஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர் தனது சகோதரரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, தனது சகோதரரின் வீட்டாருக்கும் அருகில் உள்ள வீட்டைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின்போது, குறித்த இளைஞர் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்து, கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை சம்பவத்தில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன் திரு.சச்சின்பிரபா
அவர்களின் அன்புத்தந்தை

**அமரர்.திரு.செங்கோடன்**
**விஸ்வநாதன் (ராஜேந்திரன்)**

மண்ணில் : 24.05.1963
விண்ணில் : 09.03.2023

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவனின் திருப்பாதங்களை அடைய பிரார்த்திக்கின்றோம்.

(14867)

ஆழ்ந்த துயரத்துடன் யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.

# இராசிபலன்

12.03.2023
மாசி 28, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 8.09 மணிவரை

சுவாதி காலை 6.41 மணிவரை
சுபநேரம் -9.22-10.52 மணிவரை
இராகுகாலம்- 4.52-6.22 மணிவரை

சந்திராஷ்டமம் - அச்சுவினி

வளவன்

**மேஷம்**: கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**: மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்**: நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள், கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம்.

**மகரம்**: தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், எளிதில் உணர்ச்சிவசப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்**: நண்பர்களின் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**: சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**: வீண் பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் மனக்குழப்பம் தீரும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**: செய்தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**கன்னி**: திறமை மிக்கவர்களின் ஒத்துழைப் புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**: பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மீனம்**: எதிர்பாராத வகையில் பொது வாழ்வில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

பிறரை மயக்க எண்ணுபவர் தன்னையே அழித்துக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பில் யாழில் நாளை நடைபவனி

(யாழ்ப்பாணம்)

**புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டவும் யாழ்ப்பாணத்தில் நடைபவனியொன்று இடம்பெறவுள்ளது.**




நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவின் ஏற்பாட்டில், இருநூறாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் யாழ். பரியோவான் கல்லூரியுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நடை பவனிக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி,யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அதிபர் துசிதரன்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறீதரன், பெண்களுக்கான புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் தனுஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நடைபவனியானது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து ஆரம்பித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதி ஊடாக செல்லவுள்ளது. (4-33)

# வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி திக்கம் மாணாண்டி சந்தைக்கு அருகாமையில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இருவர் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி மேற்படி பகுதியில் வைத்து பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் கொள்ளையிடப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சி.சி.ரீ.வி கமராவின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பருத்தித்துறை பொலிஸார் கொள்ளையர் இருவரையும் கைது செய்துள்ளனர். (4-60)

# வீட்டிலிருந்து கஞ்சா மீட்பு வீட்டு உரிமையாளர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த 32 வயதான நபரொருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பொலிஸாரால் கைதாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வியாழக்கிழமை பிற்பகல் தேசிய அரச புலனாய்வுப் பிரிவினர் 16 கிலோகிராம் கஞ்சாவினை மீட்டிருந்தனர்.

இதன்போது சந்தேக நபர்கள் தப்பித்திருந்த நிலையில் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்ட குறித்த வீட்டு உரிமையாளரை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை தட்டாதெருச் சந்திக்கு அருகாமையிலுள்ள காலா ஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 1, 2 மற்றும் 9ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம் / சோலை வரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் இதற்கு பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (4)

# அறுவடை செய்த பூசணியை விற்பனை செய்ய முடியவில்லை

## விவசாயி ஒருவர் கவலை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் பகுதியில் சுமார் இரண்டு ஏக்கர் அளவில் பூசணி செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய விலை கிடைக்கப் பெறாத காரணத்தினால் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

தான் பூசணி செய்கை மேற்கொள்வதற்காக 25,000 ரூபாய்க்கு பூசணி விதையினை கொள்வது செய்ததாகவும் கிரிமிநாசினி மற்றும் உரவகைகள் தனியாரிடம் அதிக விலைக்கு பெற்றதாகவும் தற்பொழுது பூசணிக்காய் அறுவடை செய்து விற்பனை செய்ய முற்படும் வேளை வியாபாரிகள் ஒரு கிலோ பூசணிக்காயை 35 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய விரும்புகின்றனர். ஆனால் சந்தையில் 1 கிலோ பூசணிக் காயின் விலை 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது எனவும் தெரிவித்தார். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது பூசணிக்காயை விற்பனை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (4-316)



ஐக்கிய ராஜ்யத்தில் இருந்து வருகை தந்திருந்த வைத்திய நிபுணர் குகன் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு தேவையான பல மில்லியன் பெறுமதியான உபகரணங்களையும் பொருட்களையும் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அண்மையில் அன்பளிப்பு செய்தார். (படம்- சிவசாந்தன்)

# கசிப்பு, வாள் என்பவற்றுடன் இருவர் பொலிஸாரால் கைது

(அராலி)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சீலாப்புலம் பகுதியில் வெவ்வேறு குற்றச்சாட்டின் கீழ் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து தெரியவருகையில்,

சீலாப்புலம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஆண் ஒருவர் 4500 மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இதேநேரம் அதே பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஒருவர் 3000 மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. உதவிப் பொலிஸ் பரிசோதகர் அசேல வத்துக்கார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருட்களுடன் பாரப்படுத்தப்பட்டனர். அவர்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

## தொழில்நுட்பவியல் கல்லூரியின்

# 2023 ஆம் கல்வியாண்டுக்கான கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2023 ஆம் ஆண்டிற்கான NVQ சான்றிதழ் மற்றும் டிப்ளோமா தரம் என அனைத்து கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து முழுநேர கற்கை நெறிகளும் முற்றிலும் இலவசமான கற்கை நெறிகள் ஆகும். சில கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக மாணவர்களை அனுமதிக்கக் கூடியதாக உள்ளதால் பயில விரும்புவோர் தாமதமின்றி 17.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் அல்லது 021 222 0028, 021 221 2403 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பாக உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் கூடியதான வெல்டிங், மெசினிங், இலத்திரனியல், கணிய அளவை உதவியாளர், மின்னியலாளர் போன்ற கற்கை நெறிகள் தொடங்கப்பட்டுள்ளது என யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்தால்

# நாடு மீட்சி பெறுமா?

கடன் வாங்கிக் கிடாய் அடித்து விருந்து கொடுக்கும் விறிசுக்குணம் கொண்ட பலரை நாம் ஊரில் பார்த்திருப்போம்.

அவர்கள் எப்போதும் தம்மை ஒரு மேதாவியாகக் காட்டிக் கொள்வார்.சபையில் தம்மை முதன் நிலைப்படுத்திக் கொண்டே இருப்பார்.

இப்படிப்பட்டவர்கள் ஊருக்கு ஒருவர் இருந்து கொண்டு தான் இருப்பார்கள்.

இலங்கை அரசுக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்க சம்மதம் தெரிவித்திருக்கும் இவ்வேளையில் பந்து எங்கள் கையில் அடித்து ஆடுவதற்குத் தயாராகுங்கள் என ஆளும்தரப்புக்கு ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

இது தற்போது பேசுபடு பொருளாக மாறியிருக்கிறது. தேர்தலைப் பிற்போட்டால் அரசு பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என எதிர்க் கட்சியினர் கூட்டாக கோரிக்கை விடுத்திருக்கும் இவ்வேளையில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களை தொடர்ந்து அரசாங்கம் அடக்கி வருகிறது.

அரசுக்கு எதிரான போராட்டங்களை அடக்கி ஒடுக்கும் அரச தரப்புகள் மீது சர்வதேசம் கண்டனங்களை பிரயோகித்திருந்தாலும் அரசாங்கம் அது தொடர்பில் கரிசனை காட்டவில்லை என்பது தான் உண்மை.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இவ்வேளையில் தேர்தலை நடத்துவது எந்த வகையிலும் பொருத்தமற்றது என ஆளும் தரப்பு விளக்கம் கொடுத்தாலும் தேர்தலை பிற்போடுவது மக்கள் உரிமைகளை மீறும் செயல் என எதிர்த்தரப்பு கூறிவருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு வழங்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்த நிலையில் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

> சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்து விட்டது.இனி எமக்கு எந்தப்பிரச்சினையும் வராது.நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி அடையும் என பேசுவோர் வாங்குவது கடன் என்பதை புரிந்து கொண்டால் சரி.



அமெரிக்க டொலரின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படும் நிதி கடன் அடிப்படையில் வழங்கப்படும் நிதி என்பதை மறந்து சர்வதேச நாணய நிதியத்தின் பணம் வரப்போகிறது இனி இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெறும் என்பது எந்த வகையிலும் மீட்சியைத் தராது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி இலங்கைக்குக் கிடைப்பது என்பது நடுக்கடலில் நிற்கும் படகு ஒன்றில் ஓட்டை ஏற்பட்டு நீர் உட்புக ஆரம்பித்ததும் அந்த ஓட்டையை மாவைப் பிசைந்து ஒட்டுவதற்குச் சமமானது.

அதாவது மாவினால் ஓட்டையை அடைத்தால் அது நீண்ட காலத்துக்கு பலன் தராது.சற்று நேரத்தில் மீண்டும் நீர் கப்பலுக்குள் புகத் தொடங்கிவிடும்.

அது போலத்தான் இந்த நிதியும் கொஞ்சக் காலத்துக்கு ஆறுதல் அளித்தாலும் அது நிரந்தரத் தீர்வு ஆகிடாது.

இந்த நேரத்தில் நாம் நாட்டை முன்னோக்கிச் செல்ல முற்பட வேண்டும். அதுவே எம்மைப் பலப்படுத்தும் என்பதை மறந்து விடக்கூடாது.

பந்து எங்கள் கைகளிற்கு வந்துவிட்டது அடித்தாட தயாராகுங்கள் என ஜனாதிபதி கூறியிருப்பதற்குள் இருக்கும் சாதக, பாதகங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் ஆட்சியாளர்கள் தமது ஆட்சியைத் தக்க வைப்பதற்கு எந்த எல்லை வரை செல்வர் என்பதற்கு அறவழிப் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகள் நல்ல உதாரணமாகின்றன.

நிலை இவ்வாறு இருக்கையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்க தான் தயார் எனக் கூறியிருக்கும் விடயம் பலரின் தூக்கத்தைக் கெடுத்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆம், புதிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷக்களின் ஆட்சியே காரணம் எனக் கூறிய அவர் நாட்டைக் கட்டியெழுப்ப தலைமைத்துவத்தை ஏற்க நான் தயார் என்றும் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசில் சாணக்கியத்தை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. யாராலும் அசைக்க முடியாது என கருதிய ராஜபக்ஷக்களின் ஆட்சியை கவிழ்த்து புதிய நல்லாட்சியை மலர வைத்த பெருமை சந்திரிக்காவையே சாரும்.

ராஜபக்ஷக்களுக்கு எதிராக யார் போட்டியிட்டாலும் அது தோல்வியிலேயே முடியும் என்ற கருத்தை உடைத்து ராஜபக்ஷக்களுக்கே தோல்விப் பயத்தைக் காட்டியவர் சந்திரிகா.

தவிர நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டை பொருளாதார சிக்கலில் இருந்து மீட்டெடுக்கவும் பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி வரும் அவரின் ஆட்சிக்காலத்தில் உணவுப் பொருட்களுக்கான விலைகள் மிகக் குறைந்த அளவில் இருந்தது என்பது மக்களின் கணிப்பாக இருக்கிறது.

அவரின் இந்த அறிவிப்பு அவரின் மீள் அரசியல் பிரவேசமாக இருக்குமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் பல அரசியல் தலைவர்களுக்கு பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அமைதிவழிப் பேச்சுவார்த்தையினை முன்னெடுத்து நாட்டில் புரையோடிக் கிடக்கும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண எத்தனித்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதிப் பங்களிப்பு கிடைத்துவிட்டது.இனி ஆட்சியைத் தக்க வைக்கலாம் என நம்பிக்கை கொண்டிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாட்டை மீட்டெடுக்க, தலை மைத்துவத்தை ஏற்க நான் தயார் என அறிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா.

இந் நிலையில் இனி அமையப் போகும் காலங்கள் எவ்வாறானதாக அமையும் என்பதை ஊகிக்க வேண்டியது மக்களாகிய எமது பொறுப்பே.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

நல்லூர் முருகன் ஆலயத்தில அர்ச்சகராக இருந்த மாணிக்கம் ஐயா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட சுப்பிரமணிய ஐயர் மகாதேவக் குருக்கள் தேக வியோகம் அடைந்துவிட்டார். அவரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விஸ்வலிங்கம் எழுந்தார்.

அது சரி, அண்மையில தேசிய பாடசாலைகள் என்று அறிவிக்கப்பட்ட பாடசாலைகள் இன்னமும் மாகாணப் பாடசாலைகளாகத்தான் இருக்குது எண்டால் நிலைமை என்ன மாதிரி.

**கங்காணி:-** எல்லாம் இரண்டும் கெட்ட நிலை தான். ஆசைப்பட்டதுக்கு தேசிய பாடசாலை எண்டு மதில் சுவரில எழுதினது தான் மிச்சம்.

**மூப்பர்:-** அப்பவே படிச்சுப் படிச்சுச் சொன்னம். மாகாணப் பாடசாலைகளாக இருங்க எண்டு. கேட்டினமோ. அவரைப் பிடிச்சு, இவரைப்பிடிச்சு மாகாணப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்கிச்சினம். இப்ப பாடசாலைக் கட்டமைப்பே மாற்றம் பெறப் போகுது.

**சாத்திரியார்:-** காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், சமஷ்டி எல்லாம் எங்களுக்குத் தேவை. ஆனால் மாகாணப் பாடசாலைகளை மட்டும் தேசிய பாடசாலைகளாக ஆக்க வேணுமெண்டு நாங்களே கேக்கிறமெண்டால், எங்கட உரிமைக்கான குரல் போலித்தனமானது தானே.

**பண்டிதர்:-** சரி... சரி... உங்க வடக்கு மாகாணப் பாடசாலைகள் முழுவதிலும் அபயம் என்ற பேரில குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை எடுத்து, ஆளுநர் அலுவலகத்திற்கு மாணவர்கள் நேரடியாக முறையீடு செய்யலாம் எண்டு அறிவிக்கப்பட்டிருக்குது. அதால இப்ப ஆளுநர் அலுவலகத்திற்கு ஒரே தொலைபேசி அழைப்புத் தானாம்.

**சிறாப்பர்:-** ஓ! பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக அவையளுக்குள்ளேயே நிறையப்பேர் இருக்கினம்.


இது தவிர பெற்றோர், மாணவர்கள் எண்டு ஏகப்பட்டவர்கள் இருக்கினம் தானே. அப்ப ஆளுநர் அலுவலகத் தொலைபேசி சதா அலறிக் கொண்டு தான் இருக்கும்.

**வாத்தியார்:-** தெரியாமல் தான் கேக்கிறன் எங்கட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மிகவும் மோசமானவர்கள் எண்டு வடக்கு மாகாண ஆளுநர் நினைக்கிறாரோ அல்லது பாடசாலைச் சமூகத்தை உலுப்பிறது சுகம் எண்டு கருதுகிறாரோ தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரையில, மாணவர்களுக்கு அபயம் அளிக்கிற இடம் பாடசாலைகள் தான்.

அங்க இருக்கிற அதிபர், ஆசிரியர்கள் தான் மாணவர்களின் காவலர்கள். எத்தனையோ மாணவர்களின் அடிப்படை நலன்களைக் கவனிக்கிறதில எத்தனையோ அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்போட செயலாற்றுகினம். ஆனாலும் அதொண்டும் வெளியில வராதாம்.

**பண்டிதர்:-** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஒரு சில அதிபர், ஆசிரியர்கள் தொடர்பில முறைப்பாடுகள் இருக்கத்தான் செய்யுது.



அதிபர், ஆசிரியர்களை குற்றவாளிகளாகப் பார்க்கும்...

அதற்காக ஒட்டு மொத்த அதிபர், ஆசிரியர்களையும் குற்றவாளிகள் போல பார்ப்பதும் அவர்கள் தொடர்பில முறைப்பாடு செய்வதற்கு அபயம் எண்டு பெயர் சூட்டுவதும் அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல.

உண்மையில இந்த ஏற்பாடுகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான இடைவெளியை அதிகரிக்கச் செய்வதுடன் ஏதோ கடமைக்கு வேலை செய்வதாகத் தான் எதிர்கால நிலைமை அமையும்.

**மூப்பர்:-** ஓ! இப்ப தமிழர்களின்ர கல்வியை விழுத்துறதில கடும் பிரயத்தனம் நடக்குதெண்டு தான் கேள்வி.

என்னைப் பொறுத்தவரை மாணவர்களின் கற்றல் செயற்பாடு, மாணவர்களின் வரவு ஒழுங்கு, மதுபாவனையுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் படும் கஷ்ரம் என்பன தொடர்பில வடக்கு மாகாண ஆளுநர் கவனம் எடுத்தால் அது நல்லது.

அதிலும் பாடசாலைக்கு ஒழுங்காக வராத மாணவர்கள், இடை விலகிய மாணவர்கள் தொடர்பில ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மேலதிகமாக உள்ள பட்டதாரி உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்து, அந்தக்குழு குறித்த மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைப் பாடசாலைக்கு ஒழுங்காக வரச் செய்தால், அது தான் பெரும் புண்ணியம்.

இப்படி பாடசாலைக்கு ஒழுங்கீனமாக வருகின்ற மாணவர்கள் தொடர்பில், உணவுக்கும் மேலதிக சீருடைகளுக்கும் கஷ்ரப்படுகிற மாணவர்கள் பற்றி குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அறிவியுங்கள் எண்டு ஆளுநர் அலுவலகம் தீர்மானித்திருந்தால் எவ்வளவோ நன்மை கிடைத்திருக்கும். இதென்னடாவெண்டால், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆளுநர் அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்ய, ஆளுநர் அலுவலகம் அந்தரப்பட்டு அதை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்த; அவர்கள் எல்லா வேலைகளையும் விட்டுட்டு குழுக்கட்டிக் கொண்டு வெளிக்கிட்டு விளக்கம், விசாரணை நடத்த அது பற்றி அந்தப் பாடசாலை மற்றும் ஊரெல்லாம் கதைபட, அட அப்ப நாங்களும் வாத்திமாருக்கெதிராக முறைப்பாடு செய்யலாம் எண்டு திட்டம் போட எல்லாம் அம்போ எண்டாகும்.

மூப்பர் மூச்சு விடாமல் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது.

மூப்பர் கூறியதில் இருக்கக்கூடிய நியாயத்துவத்தை ஆலடியில் இருந்தவர்கள் உணர்ந்தும் ஏற்றும் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். அதிபர் ஆசிரியர்கள் கௌரவத்திற்குரியவர்கள். அவர்களைக் குற்றவாளிகளாக ஆக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமாயின் அது நிச்சயம் வடபுலத்து மாணவர்களின் கல்விப் பெறுபேற்றில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும்.

அதேவேளை பாடசாலைகளில் அறவே பிரச்சினைகள் இல்லை என்றும் கூறமுடியாது.

அவ்வாறு பிரச்சினைகள் இருக்குமாயின் அதனை அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளும் அதற்கும் அப்பால், மாகாணமும் மாகாணக்கல்வி அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை விடுத்து அதிபர் ஆசிரியர்களின்ர விடயங்களில ஆளுநர் அலுவலகம் நேரடியாகத் தலையிடுமாயின், அது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உறவை கணிசமாகப் பாதிக்கும்.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும் என வாத்தியார் கூற, அதனைத் தானும் அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னியின் செல்வன் படத்தில் வரும் நந்தினி கதாபாத்திரம் பற்றிய உமது கருத்து என்ன வியாசரே?






சின்னத்திரை நாடகங்களில் பெண் கதா பாத்திரங்கள் குடும்பத்தை அழிப்பது போல சித்தரிக்கப்படுகிறதே?

**ரமணன் — யாழ்ப்பாணம்**

**கண்கட்டி வித்தை ஏமாற்று அரசிய லுக்கு முடிவே இல்லையா வியாசரே?**

மக்களை ஏமாற்றுவோம் தேர்தலில் வெல் வோம் என்பதே அநேக அரசியல்வாதிக ளின் தாரக மந்திரம்.

மனிசன் பாராளுமன்றத்தில என்னமா பேசுகி றது.

இப்படிப் பத்துப்பேர் இருந்தால் தமிழினத் துக்கு விடிவு கிடைத்துவிடும் என மக்கள் பேசும் அளவிற்கு பாராளுமன்றத்தில் பேசுவர்.

அவ்வளவு தான் அதன்பின் எங்கு, எந்தப் பக்கத்தில் குறுக்கே ஓடினால் எத்தனை கோடி கிடைக்கும் என மனக்கணக்குப் போட்டு தம் வங்கிக்கணக்கை உயர்த்துவார். மக்கள் வாழ்வாதாரம்தான் வறுமைக் கோட்டின் கீழ் கிடைந்து சன்னதமாடும்.

**ராஜ் — மானிப்பாய்**

**இன்றை இளம் சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் வியாசரே?**

முதலில் பெரியவர்களைக் கனம் பண்ணத் தெரிந்து கொள்ளுங்கள். பொது வெளி யில் எவ்வாறு எவற்றைப்பேச வேண்டும் என்பதை கற்றுக் கொள்ளுங்கள்.

ஏதோ உங்களுக்கு மட்டும் தான் அறிவு இருக்கிறது. மற்றவர்கள் மடையர்கள் என்ற எண்ணத்தில் உங்களின் பேச்சு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளு ங்கள்.

ஏனென்றால் பொதுவெளியில் உங்க ளின் பேச்சுகளும் நடத்தைகளும் மற்ற வர்களை முகம் சுழிக்க வைக்கும் என் பதை மறந்து விடாதீர்கள்.

முதலில் இந்தத் தெளிவு உங்களுக்கு முக் கியம். அதன் பின்னரே மிச்ச அனைத்தும்.

**மதுவன் — மீசாலை**

**சின்னத்திரை நாடகங்களில் பெண் கதா பாத்திரங்கள் குடும்பத்தை அழிப்பது போல சித்தரிக்கப்படுகிறதே?**

அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள்.

அவ்வாறான நகர்த்தல்களே தற்போது எம் சமூகத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

அதற்கு முக்கிய காரணம் இந்த சின்னத் திரை நாடகங்கள்.

ஆம், எந்த ஒரு தொடர்களை எடுத்தாலும் அங்கு பெண்களே மிகக் கொடுமையானவர் களாய் சித்தரிக்கப்படுகிறார்கள்.

அதிலும் மாமி-மருமகள் முரண் மிகத் தீவி ரம் பெற்றிருப்பதைக் காண முடியும்.

இவையே இப்போது சமூகத்தின் சகதிக்குக் காரணம் என்பதை நாம் புரிந்து கொண்டால் சரி.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**பந்து எங்கள் கையில் அடித்தாட தயா ராகுங்கள் என ஆளும் தரப்பிடம் ஜனாதி பதி கூறியிருக்கிறாரே?**

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைக்கப்போகிறது. அதனால் இனி எம் ஆட் சியை எதுவும் செய்துவிட முடியாது.

இந்த விடயத்தை எதிர்க்கட்சியினருக்கும் தனது ஆட்சியைக் கவிழ்க்க திட்டம் தீட்டுப வர்களுக்கும் மறைமுகமாக எச்சரித்திருக் கிறார் ஜனாதிபதி.

ஆனால் இதுவும் கடன்தான். இந்த நிதி உதவி யையும் எம் தலையை அடமானம் வைத்துத்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**சுதன் — குப்பிழான்**

**சொந்த இனத்தையே படுகொலை செய்த நாட்டில் தேர்தல் நீதியாய் நடக்குமா?**

ஒரு நாடு இரு இனம். இந்த இரு இனத்தில் ஒரு இனம்தான் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்ற அதிகாரத்தொனி இருக்கும் பெரும்பான்மை ஆட்சியாளர்களால் சிறு பான்மை இனத்தை அழிக்க முடியுமே தவிர ஒரு நாளும் அவர்தம் பண்பாடு, கலாசாரத்தை அழித்து விட முடியாது.

அது எமது இனத்தின் இரத்தத்தில் ஊறி யது. அதை எவராலும் அழிக்க முடியாது. அப்படி நினைத்தால் அவர்கள் அழிந்து போவார்கள்.

**திலக் — கிளிநொச்சி**

**அன்புதான் இந்த உலகின் ஆயுதம் என்றால் நம்புவீர்களா?**

நிச்சயமாக நம்புவேன். இந்த உலகில் அன்பு ஒன்றே நிரந்தரமானது.

இது ஏனோ பலருக்குப் புரிவதே இல்லை. மனித வாழ்க்கைக்குப் பணம் தான் முக் கியம் என நினைத்து மனசாட்சி இல்லா மல் மற்றவர் மனங்களை ரணமாக்கி பணம் சம்பாதித்து வங்கிகளை நிறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் என்ன விடயம் என்றால் அன்பி னால் உலகை ஆள வேண்டிய வயதில் பணத்தைத்தேடி அலைந்து விட்டு பின்பு அன்பு செலுத்த ஆள் இல்லாமல் அலை வார்கள்.

**சிவம் — வதிரி**

**நீதி, நியாயம் இல்லாதவர்களிடத்தே அன்பை எதிர்பார்க்கலாமா வியாசரே?**

அன்பு ஒன்றும் கடையில் விற்கும் பொருள் இல்லையே. கால்கிலோ, அரைக்கிலோ என நிறுத்துப் பெற்றுக் கொள்ள.

தமிழினம் இந்த நாட்டில் சுதந்திரமாக, நிம்மதியாக வாழ வேண்டும் என்று எத் தனை வழிகளில் போராடி விட்டது.

ஆனால் அவை எவற்றிற்கும் இங்கு மதி ப்பே இல்லை.

நாம் ஒருவரிடத்தே அன்பை எதிர்பார்ப்ப தற்கு முன்னர் அவரிடம் அன்பு செலுத்தும் பண்பு இருக்கிறதா என அறிந்து விட்டு செயற்படுவது சிறந்தது.

இது இலங்கை அரசாங்கங்களுக்கும் பொருந்தும்.

**தனுசன் — கிளிநொச்சி**

**பொன்னியின் செல்வன் படத்தில் வரும் நந்தினி கதாபாத்திரம் பற்றிய உமது கருத்து என்ன வியாசரே?**

அழகு எவ்வளவு ஆபத்தானது என்பதையும் பெண்ணின் அழகில் மயங்கிய ஒருவனால் ஒரு நாடே அழிந்து போகும் வரலாற்றைக் கொண்டதாய் வடித்திருக்கிறார் கல்கி.

ஆனால் நந்தினியிடம் வெறும் அழகு மட்டும் இல்லை. மிகச் சிறந்த அறிவும் உண்டு என்ப தையே கல்கி அவளில் படைத்திருக் கிறார்.

தம்முடன் கூடவே இருப்பவர்கள் தன்னைப் பழி வாங்க மாட்டார்கள் என்ற அதீத நம்பி க்கை ஒரு பெரிய பளு வேட்டையரை எவ் வாறு அழிக்கிறது என்பதை பொன்னியின் செல்வன் இரண்டாம் பாகத்தில் பார்த்து மகி ழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: சரஸ்வதி சபதம்
பாடியவர்: பி. சுசீலா
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: ம.எ. மஹாதேவன்



தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா
தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா
ஏனிந்த வாழ்க்கை என்று அறியேனம்மா
ஏனிந்த வாழ்க்கை என்று அறியேனம்மா
இது இறைவனுக்கு ஒய்வு நேர விளையாட்டம்மா

தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா

பெற்றவள் உடல் சலித்தாள்
பேதை நான் கால் சலித்தேன்
படைத்தவன் கை சலித்து ஒய்ந்தானம்மா
அம்மா அம்மா அம்மம்மா
பெற்றவள் உடல் சலித்தாள்
பேதை நான் கால் சலித்தேன்
படைத்தவன் கை சலித்து ஒய்ந்தானம்மா
– மீண்டும்
பாவி ஒரு தாய் வயிற்றில் பிறவேனம்மா
– மீண்டும்
பாவி ஒரு தாய் வயிற்றில் பிறவேனம்மா

தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா

பத்தும் பறந்திடும் பசி வந்தால் மறந்திடும்
இளமையில் கொடுமை இந்த வறுமை
அம்மா அம்மா அம்மம்மா
பத்தும் பறந்திடும் பசி வந்தால் மறந்திடும்
இளமையில் கொடுமை இந்த வறுமை அம்மா
– என்றும்
இது தான் நீதி என்றால் இறைவன் வேண்டுமா
– என்றும்
இது தான் நீதி என்றால் இறைவன் வேண்டுமா

தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா
தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா

# அரசியல் பழகு!

**முறையாக நீதி வழங்குகின்ற மன்னன் இறைவனுக்கு சமம் என்பது வள்ளுவர் வாக்கு. அந்த நீதி தவறியதால்தான் பாண்டிய நாடு, கண்ணகியால் தீக்கிரையாக்கப்பட்டது. அரசியல் ஆன்மிகப் பண்பை இழந்தால் அது கொடுங்கோன்மையாகும். அந்த கொடுங்கோன்மை உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் நிச்சயம் அழிக்கப்பட வேண்டியதே.**

ஒவ்வொரு தேசங்களிலும் செங்கோல் வழுவாது அறத்தை நிலை நாட்டி அமைதியை ஏற்படுத்துவதே ஆன்மிக அரசியலின் அதி உன்னத இலக்காகும் அல்லது நோக்கமாகும்.

அதனால் தான் "தத்துவஞானிகளே மன்னர்களாக வேண்டும்" என்கிறார் கிரேக்க அறிஞர் பிளேட்டோ. இங்கு தத்துவஞானிகள் என்றால் யார் ? என்ற சிந்தனை இயல்பாகவே எல்லோரிடமும் எழுகின்றது.

உலகம் வேறு, நான் வேறு என்ற பாகுபாடு இல்லாமல் கடவுள் வேறு, நான் வேறு என்ற துவைத சிந்தனை கடுகளவும் இல்லாமல் எல்லாவற்றிலும் ஊடுருவி எங்கும் வியாபித்து பரந்து நிற்கும் அந்த சத்தியத்தை உள்ளபடி உணர்ந்து உண்மையை அறிந்தவனே தத்துவ ஞானியாவான்.

ஒரு தத்துவஞானி ஒரு தேசத்தின் தலைவனாக உருவெடுத்தால்தான் எப்போதும் ஆன்மிகமாக இருக்க வேண்டிய அரசியல் ஆன்மிகமாகவே இருந்து அறத்தை நிச்சயம் நிலை நாட்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

"மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்" என்கிறது தமிழ் இலக்கியம். அதாவது இந்த உலகம் உடல் எனில் அதன் உயிர் மன்னனாகிய ஆன்மா என்பதே அதன் அர்த்தமாகும். மன்னன் என்ற சொல்லுக்கு உலமாகிய இயற்கையையும் அதன் குடிமக்களையும் அனைத்து ஜீவராசிகளையும் சதா எண்ணிச் சிந்தித்து வாழ்பவன் என்று பொருளாகின்றது.

இதனால்தான் பண்டைய கால மன்னர்கள் தங்களைச் சூரிய, சந்திர வம்சத்தினர் என்று அழைத்தனர். சூரியன், சந்திரன் போன்று எங்கும் சமத்துவமாய் ஆன்மிக அரசியலில் எங்கும் ஒளி வீசக் கூடியவர்களாய் மன்னர்கள் விளங்கினார்கள்.

பண்டைய கால.மன்னர்கள் மாபெரும் அரசியல் செய்தார்கள். ஆனால் அதை அரசியல் என்று ஒருபோதும் சொல்ல முடியாத அளவுக்கு அவர்கள் அரசியல் எங்கும் வெளிப்பட்டது. புறாவின் உயிர் காப்பதற்காக தன் சதைத்தின் தசையை அரிந்து பருந்துக்கு கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் அரசியல் எப்படி ஆன்மிகமாக உருவெடுத்தது.


தன்னுடைய புத்திரனின் செயலால் தன் கன்றை இழந்த பசுவிற்காக தன் புத்திரனையே தேர்ச் சில்லில் நசித்து கொன்று நீதி வழங்கிய மனுநீதி கண்ட சோழனின் அரசியல் எப்படி ஆன்மிகமாக உருவெடுத்தது.

பூமியிலே அநாதரவாக வீழ்ந்து கிடந்த முல்லைக் கொடிக்கு தன் தேரையே கொடுத்துச் சென்ற மன்னன் பாரியின் அரசியல் எப்படி ஆன்மிகமாக உருவெடுத்தது.

குளிரிலே வாடி நின்ற மயிலுக்கு தன் போர்வையை போர்த்திச் சென்ற மன்னன் பேகனின் அரசியல் எப்படி ஆன்மிகமாக உருவெடுத்தது.

இந்த மன்னர்களுடைய உள்ளக் கிடங்கில் இருந்து பேரலையாய் எழுந்த அனைத்து எண்ணங்களினுடைய செயற்பாட்டு அரசியல் என்பது ஆன்மிகம் என்பதற்கான சான்று என்பதை உலகத்துக்கு சுட்டிக் காட்டுகின்றது.

மக்களையும் அவர்கள் சார்ந்த ஜனநாயகத்தையும் நேசிப்பது அவர்களை இயற்கையிடமிருந்தும் பகைவர்களிடமிருந்தும் பாதுகாப்பதுமே மன்னாதி மன்னர்களின் முதல் பணியாக இருந்தது.



முறையாக நீதி வழங்குகின்ற மன்னன் இறைவனுக்குச் சமம் என்பது வள்ளுவர் வாக்கு. அந்த நீதி தவறியதால்தான் பாண்டிய நாடு கண்ணகியால் தீக்கிரையாக்கப்பட்டது. அரசியல் ஆன்மிகப் பண்பை இழந்தால் அது கொடுங்கோன்மையாகும். அந்த கொடுங்கோன்மை உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் நிச்சயம் அழிக்கப்பட வேண்டியதே.

சமகாலத்தில் அரசியல் என்பது மக்களை பிழிந்து அரசியல் வாதிகள் மட்டுமே சுகபோகங்களை அனுபவித்து வாழும் சுயநலமிக்கதாக மாறிவிட்டது.

இங்கே சுயநலமென்பது அன்பை அழித்துப் பிறப்பது. மக்களை ஏமாற்றி இன, மத உணர்வுகளைத் தூண்டி அறிவை மறைத்து மக்கள் மேல் சவாரி விடுவது. இதை அரசியல் என்பதா? இல்லை கொடுங்கோன்மை என்பதா? இல்லை பகற்கொள்ளை என்பதா? இதை அனுபவித்த நாம் உண்மை அரசியலை ஆன்மிகம் என உணரும் வாய்ப்பை இழந்து விட்டது நம் துரதிர்ஷ்டமே.

காந்தி அரசியலை ஆன்மிகமாக்கிய தற்கால மகாத்மா ஆவார். உலகம் அவரை அஹிம்சாவாதி என்கிறது. லெனினும் மாசேதுங்கும் கொடுங்கோன்மையின் ஆதிக்கத்தின் கீழிருந்த பாமர மக்களை மீட்ட பெரும் மீட்பர்களாக மக்களால் இன்று வரை பார்க்கப்படுகின்றார்கள். இதுவெல்லாம் ஆன்மிக அரசியலின் அடித்தளமாகும்.

சுயசம்மதம், பூரண சம்மதம் மக்களிடம் இருந்து பெற்றதே உண்மையான மக்களாட்சி. அதுவே உயர்ந்த ஆன்மிக அரசியல். அது இன்று கேலிக் கூத்தாக மாறி விட்டது. சமகாலத்தில் உலக அரசியல் ஒழுங்கு என்பது மக்களைச் சூறையாடும் கொள்ளையர்களின் கைகளிலே விழுந்து கிடப்பதால் மட்டுமே அந்த பண்டைய அரசியல் ஆன்மிகம் என்ற தன் இயல்பை இழந்து விட்டது என்று எண்ணுதல் மாபெரும் தவறாகும். ஆன்மிகமே மாபெரும் அரசாட்சி தான் என்று நாம் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

சாம் - ரமேஸ்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகள் சிந்திய கண்ணீர்!

விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் விடைபெறல் தருணங்களைப் பார்த்திருக்கிறீர்களா? அதுவரை மாபெரும் ஆளுமைகளாக ஒரு தனிப்பெரும் நாயகர்களாக பார்க்கப்பட்டவர்களின் இன்னொரு முகத்தை, அதாவது அவர்களின் மனவெளியின் மெல்லிய பக்கங்களை அந்த விடைபெறல் தருணங்களில் காணமுடியும். இதுவரை தாங்கள் கட்டி ஆண்ட மைதானத்தில் தங்களின் கடைசி நொடி இருப்பை எப்படி வெளிக்காட்டுவதெனத் தெரியாமல் மனம் வெதும்பி கண்ணீர் சிந்துவார்கள். சக வீரர், வீராங்கனைகளுமே கூட அவர்களின் பிரிவுக்காக வருந்தித் துயருறுவார்கள். விடைபெறப்போகும் அந்த வீரரைத் தோளில் ஏற்றிக் கொண்டு மைதானம் முழுவதும் பவனி வருவர்கள்.

இதெல்லாம் நாம் பல சமயங்களில் பல விளையாட்டுகளில் பார்த்தவைதான். சச்சின் தொடங்கி சானியா மிர்சா வரை பலரின் விடைபெறல் தருணங்களில் இவைதான் அரங்கேறியிருக்கின்றன. ஆனால், இந்த வழக்கத்தைக் கடந்து சமீபத்தில் ஒரு நிகழ்வு நடந்திருந்தது. விடைபெறல் இலக்கணங்களையெல்லாம் மீறி நிகழ்ந்த அதிசயம் அது. இருபெரும் எதிராளிகளாக பாவிக்கப்பட்டவர்களில் ஒருவரின் விடைபெறலுக்கு இன்னொருவர் தேம்பித் தேம்பி அழுத கதையைக் கேட்டிருக்கிறீர்களா?


ரோஜர் ஃபெடரர். டென்னிஸ் கோர்ட்டைக் கட்டி ஆண்ட பெரும் ஜாம்பவான். அமெரிக்காவைச் சேர்ந்த பீட் சாம்ப்ராஸ், ஃபெடரரின் முந்தைய தலைமுறை ஜாம்பவான். முன்னாள் நம்பர் 1 வீரர் அவர். 14 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர். 2009 வரை தொடர்ச்சியாக 5 முறை விம்பிள்டன் பட்டங்களை வென்றிருந்தார். ஃபெடரரின் அந்த ஆதிக்கத்திற்கு முடிவுரை எழுதி அவர் கையிலிருந்து விம்பிள்டன் பட்டத்தைப் பறித்தார் நடால்.

2010 வரை ஃபெடரர் 16 கிராண்ட்ஸ்லாம்களை வென்றிருந்தார். அதன்பிறகான இத்தனை ஆண்டுகளில் ஃபெடரர் வெறும் 4 கிராண்ட்ஸ்லாம்களை மட்டுமே வென்றிருக்கிறார். நடாலின் எழுச்சி தந்த விளைவு இது. ஃபெடரர் Vs நடால் என்கிற இந்தச் சண்டை டென்னிஸ் உலகையே ஆட்கொள்ளத் தொடங்கியது. கடந்த 10-15 ஆண்டுகளில் டென்னிஸை தீவிரமாகப் பார்த்தவர்களை நடால் அல்லது ஃபெடரர் ரசிகர்கள் என்கிற இரண்டே வகைமைக்குள் பெரும்பாலும் அடக்கி விட முடியும். ஜோகோவிச் எங்கே எனும் கேள்வி எழுமாயின் அவருடைய சாதனைகள் பற்றியும் அவர் எட்டிப் பிடித்த அந்த மூன்றாம் இடம் பற்றியும் இன்னொரு நாள் விரிவாகப் பேசுவோம்.

இப்படி மைதானத்தில் மோதும் எதிரிகளாக, எதிரெதிர் போர்ப்படைகளாக ரசிகர்களைக் கொண்டிருக்கும் இருவரில் ஒருவர் ஓய்வு பெறும்போது இன்னொருவர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார் என்று சொன்னால் நம்ப முடியுமா? நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில், அப்படித்தான் நடந்தது. தொடர் காயங்கள் மற்றும் வயது மூப்பின் காரணமாக கடந்த ஆண்டு ஃபெடரர் ஓய்வு முடிவை அறிவித்திருந்தார். ஓய்வுக்கு முன்பாக லேவர் கோப்பை எனும் தொடரில் தனது கடைசிப் போட்டியில் ஆடப்போவதாக ஃபெடரர் அறிவித்தார். இந்தத் தொடரில் ஃபெடரருடன் நடால், ஜோகோவிச் உட்பட முக்கியமான வீரர்கள் பலருமே ஆடினர். இந்தப் போட்டியின் முடிவில்தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

டென்னிஸ் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர் எனும் பெருமை சாம்ப்ராஸ் வசம்தான் இருந்தது. நிலையானதென்று எதுவுமே இல்லையே. சாம்ப்ராஸின் சாதனைகளையும் அவரின் வல்லாதிக்கத்தையும் முறியடித்துப் புதிய அத்தியாயத்தை உருவாக்க ஓர் இளைஞர் கிளம்பி வந்தார். அவர்தான் ரோஜர் ஃபெடரர். வெறும் 19 வயதிலேயே விம்பிள்டனில் பீட் சாம்ப்ராஸை வீழ்த்தி டென்னிஸ் உலகின் புதிய நாயகனாக அறியப்பட்டார் ஃபெடரர்.

அதிலிருந்து ஃபெடரர் தொட்டதெல்லாம் ஹிட்தான்.



ரசிகர்கள் தலையில் வைத்துக் கொண்டாடும் ஒரு தலைமுறைக்கான வீரராக ஃபெடரர் மாறினார். 2009 வரைதான் பீட் சாம்ப்ராஸுக்கு அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர் எனும் பெருமை இருந்ததாகக் குறிப்பிட்டேன் அல்லவா?

2009 இல் பீட் சாம்ப்ராஸிடமிருந்து அந்தப் பெருமையைப் பறித்துக் கொண்டவர் யார் தெரியுமா... ஃபெடரர்தான். டென்னிஸ் உலகிலேயே அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர் எனும் பீட் சாம்ப்ராஸின் சாதனையை ஃபெடரர் முறியடித்தார். அதுவரை யாரும் எட்டியிராத உயரத்தை ஃபெடரர் எட்டினார். ஆங்கிலத்தில் 'Greatest Of All Time - GOAT' எனக் கூறுவார்களே... அந்த நிலையை ஃபெடரர் எட்டிவிட்டார்.

காலச்சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது. நாட்கள் ஓடுகின்றன. இப்போது ஃபெடரரைத் தாண்டியும் டென்னிஸ் உலகில் இன்னொரு கதாநாயகன் அவதரிக்கத் தொடங்கினான். ஃபெடரரால் சாம்ப்ராஸின் சாதனைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பைப் போல ஃபெடரரின் சாதனைகளுக்கு அந்தப் புதிய நாயகன் பாதிப்புகளை ஏற்படுத்தத் தொடங்கினான்.

அது வேறு யாருமல்ல. இன்றைய திகதிக்கு அதிக கிராண்ட்ஸ்லாம்களை கையில் வைத்திருக்கும் ரஃபேல் நடால்தான் அது. ஃபெடரரின் ஒவ்வொரு சாதனையையும் நடால் குறிவைத்துத் துவம்சம் செய்தார். பீட் சாம்ப்ராஸை விம்பிள்டன் களத்தில் வீழ்த்தி ஆதிக்கத்தைத் தொடங்கிய ஃபெடரர். ஒரு கட்டத்தில்

ஃபெடரர் தனது பிரிவு உபசார உரையை நிகழ்த்தத் தொடங்கினார். அவரால் கண்ணீரைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. முழுமையாக வெடித்து அழுதுவிட்டார். வார்த்தைகளைக் கூட முழுமையாக உச்சரிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு உணர்ச்சி வசப்பட்டிருந்தார். ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போல இது எல்லா விடைபெறல் நிகழ்வுகளிலும் நடக்கக்கூடியது. அதிசயம் என்னவெனில் இங்கே ஃபெடரர் அழுவதைப் பார்த்து எப்போதுமே கோர்ட்டில் அவருக்கு எதிர்ப்பக்கம் நின்றே பழகிப்போன நடாலும் கண்ணீர் சிந்தினார். அவராலும் கண்ணீரை அடக்கவே முடியவில்லை.

இப்படி ஒரு தருணத்தை விளையாட்டுலகில் பெரிதாக யாரும் கண்டதே இல்லை. அந்தத் தருணத்தில் ஒட்டுமொத்த டென்னிஸ் உலகமுமே பூரித்துப்போனது. 'களத்தில் நாங்கள் இருவருமே தீவிரமான எதிரிகள். ஆனால், வெளியே இருவருக்குமிடையே பரஸ்பரம் நல்ல மரியாதை இருக்கிறது. ரோஜரின் விலகலோடு என்னுடைய வாழ்வின் முக்கியமான பகுதி ஒன்றும் என்னிடமிருந்து விலகிச் செல்வதாக உணர்கிறேன்.

அவர் எனதருகில் இருந்த நாட்களெல்லாம் அதிமுக்கிய மானவை' எனக் கூறி ஃபெடரரின் அழுகையில் தானும் பங்கெடுத்துக்கொண்டார் நடால். எதிரிகள் சிந்திய இந்தக் கண்ணீர் என்றென்றைக்கும் நினைத்துப் பார்த்...

# மனதை வசியம் செய்யும் மாமருந்து


சமீப நாட்களில் சளி, காய்ச்சல், இருமல், தொண்டையில் வலி என உடம்பு நோக்காடு கொள்ள, மனத்திலோ காரணம் இதுவாக இருக்குமோ, அதுவாக இருக்குமோ என்று அதீத சலனம் - சஞ்சலம்! 'எனக்கும் ஒரு வாரமா காய்ச்சல் இருக்கத்தான் செய்யுது...', 'தொண்டை வலிபடுத்தி எடுத்துடுச்சு...', 'மாத்திரை எடுத்தும் இருமல் நின்றபாடில்லையே...'

சக நண்பர்களும் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள, அதன் பிறகுதான் 'அப்பாடி..!' என்று நிம்மதி கொண்டது மனம். பிரச்சினை நமக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தான் என்பது தெரிந்ததும் பயம் நீங்குகிறது. ஆம், தன் வீட்டில் மின்சாரம் கட்டாகிவிட்டால் உடனே அடுத்த வீட்டில் மின்சாரம் இருக்கிறதா என்று எட்டிப்பார்க்கும் மனித மனோபாவம் விசித்திரமானதுதான்!

எண்ணங்களின் பிறப்பிடமான மனம், வெளி மனம், ஆழ் மனம் எனும் இரண்டு அடுக்குகளால் ஆனது. புலன்களின் வழியாக வந்து சேரும் செய்திகளின் சேமிப்பு நிலையமே வெளி மனம். அப்படி வந்து சேரும் செய்திகளில், ஏதாவதொன்றை மீண்டும் மீண்டும் சிந்திக்கும்போது, அது நிரந்தரமாகத் தங்கும் புகலிடமே ஆழ் மனம்.

ஆழ் மனமானது நன்மை - தீமைகளைப் பிரித்துப் பார்க்காது. ஆகவே, நம் வெளி மனத்தின் அழுக்குகளை அகற்றுவதுடன் நிற்காமல், ஆழ்மனத்தில் படர்ந்திருக்கும் பாசிகளையும் போக்க வேண்டும். இல்லையெனில் வேண்டாத எண்ணங்களும் வீண் கற்பனைகளும் உள் மற்றும் வெளி மனங்களை ஆக்கிரமித்து விடும். அப்போது சாத்தியம் இல்லாத விடயங்கள் குறித்தும் ஆசை கள் பிறக்கும் அவை சாத்தியப்படாத நிலையில் துயரங்கள் சூழும்.

**வேடிக்கைக் கதை ஒன்று...**



மன்னன் ஒருவன் இருந்தான். அவனுக்கு முடி உதிர்ந்து தலை வழுக்கையாகி விட்டது. அதனால் மிகுந்த மன அழுத்தத்துக்கு ஆளானான். விதவிதமாக தொப்பிகள் அணிந்து கொண்டான். ஆனாலும் மனக்குறை தீரவில்லை.

ஒருநாள் அரண்மனை வைத்தியரை அழைத்து, வழுக்கைத் தலையில் முடி வளர மருந்து கண்டறிந்து தருமபடி கட்டளையிட்டான். தவறினால் மரண தண்டனை நிச்சயம் என்றும் எச்சரித்தான். அப்போது அவன் இருந்த மனநிலையில் உண்மையை உணர்த்த முடியாது என்பதை வைத்தியர் புரிந்து கொண்டார். ஒரு வாரம் அவகாசம் வாங்கிச் சென்றார். ஒரு வாரம் கழிந்த தும் ஒரு தைலப் புட்டியு டன் வந்தார். அந்தத் தைலத் தைத் தலையில் தடவினால் ஓரிரு நாளில் அடர்த்தியாய் முடி வளர்ந்து விடும் என்றார். அத்துடன் பத்திய நிபந்தனை ஒன்றையும் குறிப்பிட்டார். "இந்த மருந்தைத் தடவும்போது குரங்கை மட்டும் நினைக்கக்கூடாது" என்று. வைத்தியருக்குச் சன்மானம் வழங்கிய மன்னன் மகிழ்ச்சியுடன் படுக்கச் சென்றான்.

காலையில் எழுந்தான். தைலத்தை எடுத்து உள்ளங் கையில் ஊற்றிக் கொண்டான். அடுத்த கணம் குரங்குகள் பற்றிய எண்ணம் தோன்றியது. 'சை... என்ன இது' என்று சலித்துக்கொண்டவன், குரங்குகள் பற்றிய எண்ணமே தோன்றாத போது தைலத்தைத் தடவலாம் என்று முடிவு செய்து புட்டியை மூடிவைத்தான்.

ஆனால், அடுத்தடுத்த நாட்களில் அவன் எப்போது முய ற்சி செய்தாலும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று தைலத் தைத் தடவ முனைந்தாலும் அவன் மனம் குரங்குகளால் நிரம்பி வழிந்தது. தன் தலையில் முடி முளைக்க வாய்ப்பே இல்லை என்ற உண்மை அதன் பிறகே அவனுக்குத் தெரிந்தது!

மனக் கட்டுப்பாடு இல்லாத கற்பனைக் கோட்டைகள் இப்படித்தான் தகர்ந்து விழுகின்றன. ஆகவேதான் பெரியவர் கள் மனத்தைச் செம்மையாக வைத்திருக்க அறிவுறுத்தினார் கள் போலும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றின் இயக்கக் களம் மனம். இன்ப - துன்பங்களில் மனம்தான் ஈடுபடுகிறது. மனத்தைப் பொறுத்ததே மனிதனின் செயல். மனத் தூய்மைக்கு ஏற்பவே வாழ்வில் இன்பம் வளரும். ஆனால், யதார்த்தம் என்ன தெரியுமா?

எதிர்மறையாக எண்ணுவதிலேயே பெரும்பாலான மனிதர்களின் காலம் உருள்கிறது. கடந்த காலத்தில் நிகழ்ந்து முடிந்த செயல்களின் விளைவுகளைப் பற்றியும், எதிர் காலத்தில் இன்னின்ன விடயங்களைச் சந்திக்க நேரிடுமோ என்ற அச்சம் குறித்துமான சிந்தனைகளே அவர்களை ஆட்டிப்படைக்கின்றன.

தந்தை ஒருவர், வெளியூருக்கு வேலைக்குச் சென்றுவிட்ட தன் மகன் போனில்கூட ஒரு வார்த்தை பேசுவதில்லை; தான் அழைத்தாலும் கண்டு கொள்வதில்லை. வாட்ஸப்பில் விசாரித் தாலும் பதில் சொல்வதில்லை...' என்று நண்பரிடம் குறைப்பட் டுக் கொண்டார்.

உனக்குச் சாமர்த்தியம் பத்தாது. உன் போனைக் கொடு. உன் மகனுக்கு நான் மெசேஜ் செய்கிறேன். உடனே ரிப்ளை வரும் பார்" என்ற நண்பர், போனை வாங்கி ஏதோ தகவல் தட்டிவிட்டார். அடுத்த சில கணங்களில் மகன் போனில் அழைத்தான். "என்னப்பா... 10,000 ரூபாய் போட்டிருப்பதாக மெசேஜ் அனுப்பியிருக்கீங்க, என் அக்கவுண்ட்டுக்கு வரவே இல்லையே!" அடுத்தவர் மனத்தைப் படிக்கும் கலை என்பது இதுதான். நண்பர் அதில் வல்லவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிந்திடு மானிடா



போதையில் தினமும் ஏகி
பேதையை உச்சி மோர்ந்து
வாதையும் நிறைதாய் மேவ
வாழ்விலே துன்பம் சேர்ந்து
மாதை வதைத்த சோகம்
மனதிலே தினமும் வாட்டம்
பாதையும் இருண்டு போகும்
பரிவுடன் புரிந்து கொள்வாய்

கருவறை சுமக்கும் தெய்வம்
காசினி தந்ததன்றோ
பெருமையாச் சொல்லி நாளும்
பேறெனக் கொள்ள வேண்டும்

பருகிடும் மதுவாக
பார்ப்பது இழிவு தானே
திருவெனச் சிந்தை கொண்டு
தீந்தமிழ் பாடுவோமே

பெண்மையின் பெருமை எண்ணி
பேறெனக் கொள்ள லாமே
கண்ணென எம்மைக் காக்கும்
கருணையும் அவளே யன்றோ
வண்ணமாய் நாளும் நின்று
வரமென உயர்வு தந்து
தண்மதி யாக ஒடித்
தரணியை வெல்வாள் அவளே

கலா,
லவ் லேன்உடுவில்.

## முதலாளித்துவம்

முதலாளி என்றால்
முற்றும் தெரிந்த வனாம்
கஞ்சிக்கு வழியில்லா நாம் - அவன்
கால்களுக்கு தூசி
பஞ்சியென்று அமர்ந்து விட்டால்
பட்டினி போட்டிடுவான்
மிஞ்சியவையே தருவான்
தரமானவை அவனுக்கு
வீட்டுவேலை, தோட்ட வேலை
கிட்டிய உறவினர் வேலைகளும் எமக்கு
சுதந்திரம் அந்தரத்தில்
சம்பளமென்று கேட்டால்
சீறிடுவான் நாகம் போல்
எங்கள் சமூக அந்தஸ்து அறியாதான்
எம் கல்வி நிலை புரியாதான்
பங்காளிகள் முன் அலட்சியம், அவமதிப்பு
எத்தனை நாட்கள் அடங்குவது?
எடுத்தெறிந்தாலும் பரவாயில்லை
நேருக்கு நேர் காட்டுவோம் செயலில்
நேரும் துன்பங்களுக்கு
விடை கொடுப்போம் துணிந்து.

மானந்தன், அல்வாய்.

## மனசாட்சி


சயனிக்கும்
ஒவ்வொரு நொடிகளும்
பறைசாற்ற
மறப்பதில்லை
பறையோடு - நாம்
மடியப் போவதை

தாலப் பெரு வெளியில்
கன்றாக இன்றி
மரமாகவே
எத்தனிக்கின்றன
எல்லா உயிரகளும்

முரண்பாட்டு
எல்லைகளும்
வில்லைகளால்
விலை பேசப்பட்டு
வீதியிலேயே
நிற்கின்றன
விற்பனைக்காக...!

எடுப்பவரை
ஏற்றிவிட்டு
தொடுப்பவரை
புறந்தள்ளி
புன்னகை
புரிகிறது
காலம்...!

தமிழ்விழி, சுஜீவனி
ஈரோடு, தமிழ்நாடு.



## மௌனத்தின் தேடல்- 600




## அழகி தான்

எங்களை மறைத்து விட்டு
படத்தைப் பாருங்கள்
எங்கள் அம்மா
'பாஷன் சோ' அழகி தான்

பி.மதுஷ்சன், தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 601



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அம்மா! அம்மா!!

அழகின் உயிரே!
உயிரின் ஒளியே!
ஒளியின் வழியே!
வழியின் துணையே!
துணையின் பொருளே!
பொருளின் உணர்வே!
உணர்வின் மொழியே!
மொழியின் கருவே!
கருவே அன்னையே!
அன்னையே உயிரே!

இந்திரபுத்திரன்.

## தாய் அன்பு!

அடிக்கும் வெயிலில்
அந்த மழலைகள்
முகம் வாடாமல் - அழகாய்
தன் சேலைத் தலைப்பை குடையாக்கிய
தாயே உனக்கு இந்த உலகில்
ஈடேதும் இல்லையடி!

உதிஸ்ரன்,
தெல்லிப்பழை.

## தாயே மேலானவள்

நம் உலகத்தில் நம்மைச் சுற்றி
எத்தனையோ அன்பான உறவுகள் இருந்தாலும்
வாழ்வில் தான் பத்து மாதம்
வயிற்றில் சுமந்து பெற்ற குழந்தைகளுக்கு
தன் முந்தானையில்
நிழல் தரும்
தாயே உன்னைப் போல வருமா?
அது எல்லாம் வல்ல
அந்தக் கடவுளுக்கே முடியுமா என்பது பெரும்
சந்தேகம் தான்.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## முந்தானை பிடித்து

வட்ட முகத்தழகி குங்குமப்பூ பொட்டழகி
அன்னநடையழகி அறிவான பேச்சழகி
ஓயாத வேலைக்காரி சோராத மனதுக்காரி
சோதனைகளை சாதனையாக்கும் சாதூரியக்காரி
பட்டப்பகல் தனிலே வெட்டவெளியிலே
சுட்டெரிக்கும் வெயிலிலே முந்தானை பிடித்து
கோழிக் குஞ்சுகளை காப்பது போல்
அன்னை இவள் பிள்ளைகளை காக்கின்றாள்.

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## குடையாய் விரித்தாள்

பங்குனி மாத வெயிலில் போறவனை
பார்ப்பதே. பாவம் என்று சொல்வர்
இச்சுட்டெரிக்கும் உச்சி வெயிலில்
தன் தலைக்கு முக்காடு போடாது
[illegible] முந்தானையை எங்களுக்காய்
குடையாய் விரித்தாள் அம்மா.

பி.யதுஷ்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா




காலத்தின் 54

## புதிய பொறுப்பு

புரவி மீதமர்ந்த அவள் அவனை நோக்கிப் புன்முறுவல் கோட்டினாள். தன் இடையில் அப்பொழுதும் பதிந்து நின்ற அவன் கையைத் தன் கைவிரல்களால் லேசாக அமுத்தவும் செய்தாள்.

அடுத்த விநாடி பெரும் குழப்பத்துக் குள்ளானவள் போல் திடீரெனப் புரவியைத் தட்டிவிட்டாள். அந்தப் புரவியின் வேகத்துக்கு இணையாகப் பலவர்மன் புரவியம் விரைந்தது. முன்னும் பின்னும் காவலர் சென்றனர்.

அவர்கள் கோட்டையை அணுகிக் கோட்டைக் குள் நுழையும்வரையில் அவர்களையே பார்த்துக் கொண்டு நின்ற இளையபல்லவன் கடைசியாகத் திரும்பி அந்தக் கொள்ளைக் கூட்டத்தை நோக்கினான். அங்கு யார் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. அச்சமும் துன்பமுமே மண்டிக் கிடந்தன.

இன்பத்தில் துன்பமிருப்பதால் மஞ்சளழகி சொன்னது எத்தனை உண்மையென்பதை நினைத்த இளையபல்லவன் மிகுந்த மனச் சங்கடத்துடனேயே தனது மாலுமிகளுடன் தனது மரக்கலத்தை அடைந்தான். மரக்கலத்தை அடைந்தவன் நேராகத் தனது அறைக்குச் சென்று பஞ்சணையில் படுத்தான்.

படுத்த நிலைமையைச் சிந்திக்கச் சிந்திக்கத் தனக்குச் சம்பந்த மில்லாத பெரும் பொறுப்புகள் தனது தலையில் சுமத்தப்படுவதை உணர்ந்தான். அவன் எத்தனையோ பொறுப்புகளைப் பற்றி நினைத்தான். ஆனால் அவன் அடியோடு நினைக்காத அணுவளவும் எதிர்பார்க்க முடியாத மற்றொரு பொறுப்பும் அன்றிரவில் அக்ஷய முனைக் கோட்டைக்குள் உருவாகிக் கொண்டிருந்ததை அவன் உணரவில்லை. அதை மட்டும் அவன் உணர்ந்திருந்தால் கண்டியத் தேவன் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டாலும் அன்றிரவே அந்தத் துறைமுகத்தை விட்டுத் தன் மரக்கலத்தை வெளிக் கிளப்பியிருப்பான். விதி அவனை ஓட விடவில்லை. அந்தப் பொறுப்பெனும் தளையை அவன் கால்களுக்குப் பூட்டவே செய்தது.

### காதலுக்குப் பொய்யும் தேவை

மரக்கலத்தின் அறையில் மரக்கட்டிலில் மாலுமியொருவன் விரித்துவிட்டுச் சென்ற பஞ்சணையில் படுத்துக்கிடந்த மாவீரனான இளையபல்லவன் மதியில், மரக்கலத்தின் அடியிலிருந்த ஆழ்கடலின் அலைகளைப் போலவே ஏதேதோ எண்ணங்கள் உருவெடுத்து எழுந்து எழுந்து உருண்டு புரண்டு மோதி மடிந்து கொண்டிருந்தன.

இரண்டே சித்ரா பௌர்ணமிகளுக்குள் தனது வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை மட்டுமின்றி அந்த இரண்டு சித்ரா பௌர்ணமி நாட்களும் எத்தனை வித்தியாசமானவை என்பதையும் எண்ணிப் பார்த்தான் அவன்.

ஒரு வருடத்துக்கு முன்பு சித்ரா பௌர்ணமி தினத்தில் சோழப் பேரரசின் சமாதானத் தூதனாகவும் கௌரவமான படைத்தலைவனாகவும் கலிங்கத்தின் பாலூர்ப் பெருந்துறையில் தான் இறங்கியதையும் சரியாக ஒரு வருடம் ஓடிவிட்ட இந்தச் சித்ரா பௌர்ணமியில் கேட்பவரெல்லாம் பயந்து நடுங்கும் சீனக் கொள்ளைக் காரனொருவனின் உப தலைவனாகவும் எந்தக் கலிங்கத்துடன் சமாதானத்தை நாடி ஓலை எடுத்துச் சென்றானோ அந்தக் கலிங்கத்தின் கடலாதிக்கத்தை ஒடுக்கப் பழி வாங்கும் எண்ணத்துடன் கொள்ளையரும் அநாகரிக மக்களும் கொள்ளைக்காரக் கோட்டைத் தலைவனும் கொண்ட அக்ஷயமுனையில் தானும் ஒரு கொள்ளைக் காரனாகப் பரிமளிக்கும் தீர்மானத்துடன் வந்து மரக்கலத்தை நங்கூரம் பாய்ச்சி இருப்பதையும் நினைத்து விதி மனிதனை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது என்று நினைத்துப் பெருமூச்சும் விட்டான்.

(தொடரும்)

# நான் வைரமுத்து பேசுகிறேன்...

## தமிழ் கூறு நல்லுலகு

'தமிழ் கூறு நல்லுலகு' என்ற இந்தத் தலைப்பு தமிழின் விதைப் பருவத்திலிருந்து விழுதுப் பருவம் வரை பார்க்கச் சொல்லி என் கண்களைக் கட்டாயப்படுத்துகிறது.

பல நூற்றாண்டுகளின் பரப்பை என் சின்னப் பேனாவின் சில துளி மையால் ஈரப்படுத்திவிட முடியும் என்பது சாத்தியமில்லை.

எனினும் இறந்த காலங்களின் மேல் பறந்து ஒரு பறவையின் உச்சிப் பார்வையில் இந்த தலைப்பைப் பார்த்துவிட ஆசை. ஒரு ராஜாளியின் உயரத்திற்குப் பறக்க



வில்லையெனினும் ஓர் ஈசல் உயரத்திற்குப் பறந்தேனும்.

ஒருமொழி எத்தனை எழுத்துக் களை உடையது என்பதோ, அல்லது அந்த மொழிக்கான வார்த்தையின் வயது என்ன என்பதோ உலக சபையில் அதற்குச் சிம்மாசனம் வாங்கித் தராது.

ஒரு நிலக்கரி எத்தனை ஆண்டு பூமியில் புதைந்து கிடந்தது என்பல்ல கேள்வி; அது வைரமாக அடர்த்தி அடைந்திருக்கிறதா என்பதே கேள்வி.

ஒரு மொழி மனிதனின் கருத்துலகத்திற்குச் செலுத்திய காணிக்கை என்ன? மனிதகுல மேம்பாட்டிற்கு அது சேமித்துத் தந்திருக்கும் சேதி என்ன?

இவைதாம் ஒரு மொழியை எடை போட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற துலாக் கோல்கள்.

நம் தமிழையும் இந்தத் துலாக் கோலில் நிறுத்துப் பார்ப்பதே நீதியும் நேர்மையும் ஆகும்.

சப்தங்களின் எடையைக்கூட நிறுத்துச் சொன்ன தொல்காப்பியம் மனித மனத்தின் போக்குவரத்திற்குக் கோடு கிழித்துக் கொடுத்த குறள்- மனிதனின் சமுத்திர உணர்ச்சிகளைச் சின்னச் சின்னச் சிப்பிகளில் சிக்க வைத்துக் காட்டிய சங்க இலக்கியம்- [illegible] கொடுத்த நீதிநூல்கள் என்றும் சல்லடை இலக்கியங்கள். -கவிதைச் சத்து மிகுந்த காப்பியங்கள் - ஆழ்வார்கள் நாயன்மார்களின் ஆனந்த அழுகைகள் - சித்தர்களின் நெருப்புச் சித்தாந்தங்கள் -ஆடம்பரமான பிரபந்தங்கள் சிருக்காரத்தில் நனைந்த தனிப்பாடல்கள் - பழைய இலக்கியங்களைத் திருகித் திசை திருப்பிய பாரதியின் எழுத்துக்கள். - பாரதிதாசனின் வாள் வார்த்தைகள் - புதிதாய்ப் பிறப்பெடுத்த உரைநடை இலக்கியம் -கண்ணதாசன், சுரதா என்னும் தனித்தனிப் பள்ளிகள் பிரபஞ்சப் பசியோடு பேனாப் பிடித்திருக்கும் புதுக்கவிதைக்காரர்கள் - தமிழ் கூறு நல்லுலகின் பரப்பு இது.

தமிழ்ச் சமுத்திரத்தில் திரும்பத் திரும்ப முக்குளித்த பிறகுதான் முத்துக் குளிக்க முடிகிறது.

தமிழ் இலக்கியத்தின் அடிநாதம் என்னவெனில் தனி மனிதனில் ஆரம்பித்துச் சமூகத்தில் சென்று முடிவதுதான்.

தமிழிலக்கியம் தனி மனிதனைச் சுத்திகரிக்கும் ஆக்கப் பணியைத் தன் தோள்மேல் போட்டுத் தொண்டாற்றி வந்திருக்கிறது.

திருவள்ளுவன் கூட ஒரு பெரிய ஜனசமூகத்தை முன்னிலைப்படுத்தித் தன் குறளை ஒப்பிக்கவில்லை.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்."**

**"ஒருமைக்கண் தாம் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப் புடைத்து."**

**"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் - மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை"**

இப்படிக் குறளின் ஒவ்வொரு குரலும் தனி ஒருவனை அல்லது தனி ஒருத்தியை முன்னிலைப் படுத்தித்தான் ஒரு ஞானியின் அனுபவக் குரலில் பேசுகிறது.

தன்னல மறுப்பும் - பொது நலப் பொறுப்பும் தமிழ் கூறு நல்லுலகம் வலியுறுத்தி வந்த நெறிகள்.

தன்னலம் மட்டுமே செங்கோல் செலுத்தி வந்திருக்குமாயின் இந்த உலக உருண்டை என்றோ உடைந்திருக்கும்.

(தொட...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

333

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## ஆன்மீகமும் அறிவியலும் இரு துருவங்கள் அல்ல

(சென்ற வாரத்தொடர்ச்சி...)

மனிதனின் சிந்தனை ஓட்டத்தில் ஏற்படும் குழப்பமான நிலையே பல உடல் சம்பந்தமான அறிகுறிகளுக்கும் நோய்களுக்கும் அடிப்படை காரணங்களாக அமைகின்றன என்பதை பல ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அனைத்து மதங்களுமே மனிதனின் சிந்தனை ஓட்டத்தை நெறிப்படுத்தி சுகப்படுத்தும் அற்புதமான மருத்துவக் கலையை கற்பித்து நிற்கின்றன. எல்லா மதங்களிலுமே அற்புதமான மருத்துவக் கருத்துக்கள் பொதிந்திருக்கின்றன.

தற்போதைய மருத்துவ உலகு நோய்த் தடுப்பு முறைகளிலேயே அதி தீவிர கவனம் செலுத்த ஆரம்பித் திருக்கிறது. உலக சுகாதார செல வினங்களிலேயே பெரும்பகுதி நோய்த் தடுப்பு மருத்துவத்தை நோக்கி திசை திருப்பப்பட்டிருக்கிறது. மதங்கள் இந்த நோய்த்தடுப்பு மருத்துவம் சம்பந்த மான தெட்டத் தெளிவான கருத்துக்களை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகின்றது.

நவீன மருத்துவமுறைப்படி ஒருவர் நோய்வாய்ப்படுவதை தவிர்ப்பதற்கு சில அடிப்படை அறிவுறுத்தல்களை முன்வைப்பது வழக்கம். அவற்றின் சில முக்கியமான அம்சங்களாவன. தினமும் ஒழுங்கான உடற்பயிற்சி இதனை காலையில் செய்து கொள்வது சிறந்தது.

மாச்சத்து அதிகமுள்ள உணவு வகைகளை குறைத்து புரதச்சத்து மற்றும் நார்த்தன்மையுள்ள உணவு வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் மேலதிக உணவைத் தவிர்த்தல். வீட்டுச் சுற்றாடலையும் உடலையும் சுத்தமாக பேணுதல்.

புகைத்தல், மது அருந்துதல், தகாத பாலியல் தொடர்புகள் போன்றவற்றை தவிர்த்தல். சுத்தமான உடைகளையும் அங்கிகளையும் அணிதல்.

விட்டமின் D தொகுப்பிற்காகவும் உடற்சுகாதாரத்திற்காகவும் மெல்லிய சூரிய ஒளியில் நடமாடுதல். ஒழுங்கான மன அமைதிக்கான நடைமுறைகள் மற்றும் சுவாசப்பயிற்சி போன்றவற்றை பின்பற்றுதல்.

இந்த நடைமுறைகளை கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், இருதய நோய்கள், கிருமித் தொற்றுகை, மன அழுத்தம், அதிகரித்த கொலஸ்ரோல், நிறை அதிகரிப்பு போன்ற பல நோய்கள் ஏற்படாமல் தடுக்க முடியும். இந்த அடிப்படை சுகாதார அறிவுரைக்ள் அனைத்தையும் மதங்கள் தமது மத அனுட்டான முறைகளில் அப்படியே குறிப்பிட்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

உதாரணமாக தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து கோயிலுக்கு சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறைவணக்கம் செய்ய வேண்டும் என்று இந்து மதம் சொல்லுகிறது. இங்கே உடைச் சுத்தம், உடல் சுத்தம், உடற்பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன. பஞ்சமாபாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றன. இந்த பஞ்சமா பாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல் தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றை தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பல கொடிய தொற்று நோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள், சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

விரத காலங்களிலே மாப்பொருள் தவிர்த்து பால், பழங்கள், உண்ணும் மரபு அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. பால், பழங்களிலே வினைத்திறன் கூடிய புரதங்களும் விட்டமின்களும் கனியுப்புக்களும் நார்ப்பொருட்களும் இருப்பதுடன் இது உடல்நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய ஒரு நிறை உணவாகவும் விளங்குகிறது.

சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒரு முறையாகும். இதனையே மேலைத் தேச நாடுகளிலே மருத்துவத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வரு கின்றார்கள். இதன் மூலம் பல எலும்பு , பல் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும்.

கடவுளைப் பக்தியுடன் மனமுருகி, மனம் ஒருமித்து தியானித்து வழிபடும் முறை அன்று தொட்டு எல்லா மதங்களிலுமே பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பல தீமைகள் நீங்கும், நாம் காப்பாற்றப்படுவோம், சுகம்பெறுவோம், பல நல்ல வீடயங்கள் நடைபெறும், மனம் சாந்திபெறும் என்ற நம்பிக்கை மதநம்பிக்கை உடைய அனைவரது மனங்களிலும் குடிகொண்டிருக்கிறது. இவை உண்மைதான என்ற கேள்வியும் பலரது மனங்களிலே எழத்தான் செய் கிறது. ஆனால் இவை உண்மை என ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

மனம் ஒருமித்து மனமுருகி தியானித்து வணங்குவது என்பது **Meditation, Relaxation** சுவாசப் பயிற்சி என்ற மருத்துவ விஞ்ஞானப் பதங்களுக்குள் அடங்குகிறது. இவற்றில் ஏற்படும் அனுகூலங்கள் பல இவற்றை ஒழுங்காகச் செய்துவந்தால் மனப்பாரம் குறைவதுடன் பல கொடிய நோய்களி லிருந்தும் காப்பற்றப்படுவதுடன் உடலில் நல்ல பல மாற்றங்கள் நடப்பதற்கும் இது வழிகோலும் என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நோய்த்தடுப்பு மருத்துவம் சம்பந்தமாக மட்டும் மதங்கள் வழிகாட்டி நிற்கவில்லை. நோய்களை குணமாக்கும் மருத்துவத்திலும் மதங்கள் பெரும் பங்காற்றி இருக்கின்றன. ஏன் தற்பொழுது ஆற்றிக்கொண்டிருக்கின்றன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சைவச் சித்தர்களாலும் ஞானிகளாலும் நோயை குணமாக்கும் சில இரசாயனப் பதார்த்தங்களும் கனியுப்புக்களும் உலோகங்களும் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. வேதகாலத்திலே தோன்றிய அதர்வண வேதத்தின் உப வேதங்களில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்கள் குறிப்பிடப்படிருக்கின்றன.

பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திர சிகிச்சைகள் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத் திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்புக் கத்திகளை பயன்படுத்தி இருக் கின்றார்கள். இரும்புக் கத்திகளை பாவித்தால் துருப்பிடித்து அதிலே ஏற்பு வலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்திசாதுரியமாக பாதுகாப்பான செப்புக்கத்திகளை அந்தச் சித்தர்கள் பாவித்திருக்கிறார்கள்.

அதர்வண வேதத்தின் உபவேதமாகிய ஆயுர்வேத மருத்துவத்தை சில நூல்கள் தமிழர்களின் மருத்துவமாகவும் சித்தரித்திருக்கின்றன. சிலப்ப திகாரத்திலே இளங்கோவடிகள், தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்து வரும் யோகாசனப் பயிற்சி முறையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவசித்தர்களே. இன்றும் இந்த யோகாசனப் பயிற்சிமுறை பல தொற்றுநோய்களின் கட்டுப்பாட்டிற்கு பெரும் பங்காற்றி வருகிறது.

ஒருவனுக்கு கடுமையான கஷ்டங்களும் மனத்தாக்கங்களும் மன அழுத்தமும் ஏற்படுத்தும் பொழுது அதுசம்பந்தமாக இறைவனிடம் முறையிட்டு அழும் மரபு வேதகாலத்திலிருந்தே அதாவது கி.மு 1500 வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வருகின்றது. சங்க காலப் பகுதியிலே (கி. பி. 7 ஆம் நூற்றாண்டு) தோன்றி திருமுறை களில் இந்த மரபை நாம் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கிறிஸ்தவ மதத்திலும் தமது கஷ் டங்களையும் உள்ளக்கிடக்கை களையும் இறைவனிடம் பாரப்படுத்தி முறையிட்டு வழிபடும் மரபு 2000 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரு கின்றது. இவ்வாறு கவலைகளை முறையிட்டு மன முருகி வழிபடும் பொழுது மனக்கஷ்டம் நீங்கி சுகம் பெற்று மன அமைதியும் பல நன்மைகளும் உண்டாகும் என்று மதங்கள் கூறுகின்றன. இவை தற்பொழுது உண்மை என்று மருத்துவ ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன. இந்த முறையின் ஒரு வடிவம் நவீன மருத் துவச் சிகிச்சை முறையிலே உலகெங்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை Counseling அல்லது உளவளத்துணை என்று சொல்லுவார்கள்.

இந்தச் சிகிச்சை முறையிலே மனக்கஷ்டத்திற்கும் வேதனைக்கும் உட்பட்டிருப்பவர் தனது மன உணர்வுகளை ஒரு அனுபவஸ்தர் **(Counselor)** ஒருவருடன் அப்படியே முழுமையாகப் பகிர்ந்து கொள்வார். இதன் மூலம் படிப்படியாக அவருக்கு ஒரு சிந்தனைத் தெளிவு ஏற்பட்டு தனது சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய ஒரு நிலைக்கு வருவார். இங்கு Counselor ஆகப் பணியாற்றுபவர் நோயாளியின் பிரச்சினைகளின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பார். எமது வழிபாட்டு முறையிலே அந்த அனுபவஸ்தர் அல்லது Counselor இன் ஸ்தானத்திலே கடவுள் இருக்கிறார். அவர் பலருடைய மனச்சுமைகளை நீக்கி ஆன்மிக பலத்தைக் கொடுப்பதுடன் நோயுற்றவரின் இரகசியத் தன்மையையும் பாதுகாக்கிறார். இறைவன் நாம் கூறுபவற்றை கிரகித்துக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. இதனால் நாம் எமது மனக்கஷ்டங்களை இறைவனுடன் பகிர்ந்து கொண்டு தெளிவு பெறுகிறோம்.

எனவே மதநம்பிக்கை மனிதனை பூரணப்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதுடன் மதமும் மருத்துவமும் மனிதனின் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்களாகவும் இருக்கின்றன.

(முற்றும்)

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

மீண்டும் பல திரையரங்குகளில்
கொழும்பு, மன்னார், வவுனியா, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்
யாழ் ராஜா திரையரங்கில்
12.03.2023 ஞாயிறு மாலை 3.00 மணிக்கு
Dr.சிவன்சுதனின்
தாவாரம்
முழுநீளத் திரைப்படம்
இது எமது சொந்த மண்ணின் கதை
மாணவர்களுக்கு விசேட சலுகை
தொடர்புகளுக்கு 0778256757

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறை அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தினால் பாரதூரமான விளைவு ஏற்படும்-பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய இடைக் காலத் தடையுத்தரவை ஆளும் தரப்பினர் பாராளுமன்ற சிறப்புரிமை ஊடாக விமர்சிப்பது முற்றிலும் தவறானது என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நீதிபதிகளை பாராளுமன்ற சிறப்புக்குழுவுக்கு அழைத்து அவர்களை விசாரணை செய்தால் நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் ஆகவே நீதித்துறை சவாலுக்குட்படுத்தி அரசியலமைப்பை மலினப்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தப் பிரேரணையை செயற் படுத்த வேண்டுமாயின் உள்ளூராட்சித் தேர்தல் குறித்து உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ரிட் மனுக்களை இடைநிறுத்த வேண்டும் என்றும் வழக்குகள் தொடர்பாக கட்டளை பிறப்பிக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

நீதிபதிகளை கேள்வி கேட்டால் சர்வதேச மட்டத்தில் பாரிய நெருக்கடிளை அரசாங்கம் எதிர் கொள்ள நேரிடும் என்றும் நாட்டு மக்களும் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டத்துறையை கடுமையாக விமர்சிப்பார்கள் என்றும் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார். (4)

# 2022 இல் கடன் அட்டை பயன்பாடு அதிகரிப்பு

(கொழும்பு)

2021 டிசெம்பரில், 19 இலட்சத்து 2 ஆயிரத்து 719 அட்டைகள் செயற்பாட்டில் இருந்ததாகவும் 2022 டிசெம்பரில் 19 இலட்சத்து 52 ஆயிரத்து 991 ஆக அதிகரித்துள்ளது என்றும் மத்திய வங்கி அறிக்கைகள் காட்டுகின்றன.

அவற்றில், 13 ஆயிரத்து 445 உள்ளூர் வங்கிக் கடன் அட்டைகள் மற்றும் 19, 040,720 உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடன் அட்டைகள் உள்ளன.

மேலும் 2021 ஆம் ஆண்டில் நிலுவைத் தொகை 133,285 ஆகும், இது 2022 ஆம் ஆண்டில் 143, 098 ஆக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி அறிக்கைகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன. (4)

# அதிவேக மோ.சைக்கிள்களை பதிவு செய்ய தீர்மானம்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத அதிக இயந்திர வலுகொண்ட உந்துருளிகளை சட்டரீதியாக பதிவு செய்வதற்கான முறைமையை உடனடியாக தயாரிக்குமாறு, போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு பொருத்தப்படும், 450 சி.சியை விடவும் அதிக இயந்திர வலுகொண்ட உந்துருளிகளை, உரிய முறையில் பதிவு செய்து பயன்படுத்துவதற்கான முறைமையை தயாரிக்குமாறு கோரி ஸ்பீட் ரைடர் மற்றும் விளையாட்டு சங்கங்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (4)

# தங்கம் கடத்த முயன்ற ஐவர் கைது

(கொழும்பு)

இந்தியாவின் மும்பைக்கு தங்கம் கடத்த முயன்ற இந்தியர் உட்பட 5 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 10.5 கிலோ தங்கத்துடன் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர் என இலங்கை சுங்கத்துறை தெரிவித்துள்ளது. (4)

# சீனாவிலிருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகை

(கொழும்பு)

சீனாவின் ஷங்ஹாய் நகரில் இருந்து அந் நாட்டைச் சேர்ந்த 150 சுற்றுலாப் பயணிகளுடன் ஒரு விமானம் நேற்றுமுன் தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த வருடம் ஐந்து லட்சத் திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருவார் கள் என சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சீன அரசாங்கம் கொவிட் கொள்கையை தளர்த்தி அந் நாட்டு மக்களை வரையறுக்கப்பட்ட சில நாடுகளுக்கு சுற்றுலாப் பயணம் மேற் கொள்ள சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. அந்த நாடுகளில் இலங்கையும் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. (4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 26 ½ சூரி 7 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L தனியார் வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13389 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: சூரி 12 செவ் 6 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc,MSc பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/13456 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 42 ¾ சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்: 183 cm<br>தகைமை/தொழில்: HNDE Civil BSc Engineering Reading உதவி பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13390 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: சூரி , செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bcom<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: G/13465 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 8 ¼ சூரி , செவ் 3 இல்<br>உயரம்: 180 cm<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13391 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 50 சூரி 1 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/13469 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 59 ½ சூரி 12 செவ் 8 இல்<br>உயரம்: 180 cm<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/13392 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 31 சூரி 4 செவ் 9 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc MSc பதில் விரிவுரையாளர் தற்காலிகம்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/13470 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



Azadi Ka Amrit Mahotsav

सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

சர்வதேச மகளிர் தினத்தை
முன்னிட்டு
சிறப்பு பட்டிமன்றம்
இளம் சமுதாயத்தை
வழி நடத்த வேண்டிய பொறுப்பு...
பெற்றோருக்கே! சமூகத்திற்கே!

நடுவர்







இந்தியாவின் பிரபல
பட்டிமன்றப் பேச்சாளர்
திருமதி. கவிதா ஜவகர்

காலம் : 14 மார்ச், 2023
நேரம் : மாலை 5.00 மணிக்கு
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்
(இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனிடம் கைப்பற்றும் ஆயுதங்களை ஈரானுக்கு அனுப்பும் ரஷ்யா

(மொஸ்கோ)

போரில் உக்ரைன் வெற்றி பெற வேண்டும் என்ற தீவிர முயற்சியில் அமெரிக்கா செயற்பட்டு வருகிறது. இதன் காரணமாக உக்ரைனுக்கு தேவையான ஆயுதங்களை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

இந்நிலையில், உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களை மொஸ்கோ கைப்பற்றி, அதனை ஈரானுக்கு அனுப்பி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்த ஆதாரங்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், போருக்கான ஆதரவை தக்கவைப்பதற்காக தெஹ்ரானில் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை ரஷ்யா மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

அமெரிக்கத் தயாரிப்பான ஜாவெலின் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களையும் ஸ்டிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் கடந்த ஆண்டு ரஷ்யப் படைகள் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், அவற்றில் ஏதேனும் ஒன்றை ஈரான் வெற்றிகரமாக மாற்றியமைத்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் கூறப்படுகின்றது. (4)

# கனடாவில் இன்று முதல் நேரம் மாற்றம்

(ஒன்றாரியோ)

இன்று முதல் கனடாவின் ஒன்றாரியோவில் நேர மாற்றம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த வார இறுதியான இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கு இந்த நேர மாற்றம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, கடிகாரங்களில் ஒரு மணித்தியாலம் கூடுதலாக வைக்கப்பட வேண்டும்.

பகல் வெளிச்சத்தை சேமிக்கும் நோக்கில் இவ்வாறு ஆண்டு தோறும் நேர மாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர சேமிப்பானது நவம்பர் மாத முதலாம் ஞாயிறுடன் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# சீனாவில் மர்ம காய்ச்சல் ஊரடங்கு அமுல்படுத்த முடிவு



(பீஜிங்)

சீனாவில் அதிகரித்து வரும் மர்ம காய்ச்சல் தொற்றினைத் தொடர்ந்து சில பகுதிகளில் ஊரடங்கை அறிவிக்க நகர நிர்வாகங்கள் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

காய்ச்சலைக் கட்டுக்குள் கொண்டுவர சியான் நகரில் தேவைப்படும் போது ஊரடங்கு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் ஷாங்சி நகர நிர்வாகம் விடுத்துள்ள அறிக்கையில், காய்ச்சல் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தினால் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்று கூறியுள்ளது. (4)


# குழந்தையின் மூளைக்குள் இரட்டைக் குழந்தைகள்

(பீஜிங்)

சீனாவில் உள்ள மருத்துவர்கள் ஒரு வயதுக் குழந்தையின் மூளைக்குள் இருந்து "பிறக்காத இரட்டையரை" அகற்றியதாக தெரிவித்தனர்.

குழந்தையின் தலை விரிவடைந்த நிலையில் மற்றும் உடல் இயக்க திறன்களில் சிக்கல்கள் இருப்பதாக அறியப்பட்டு, மருத்துவர்கள் ஸ்கேன் செய்துள்ளனர்.

அப்போது குழந்தையின் மூளைக்குள் அதன் "பிறக்காத இரட்டையரின்" கரு இருப்பது வெளிப்பட்டது.



அதாவது, தாயின் வயிற்றுக்குள் இரண்டு கரு உருவாகியுள்ளது. ஆனால் அதில் ஒன்று வளரும் பொழுது மற்றொன்று குழந்தையின் மூளைக்குள் சென்று, அதனுள்ளேயே சிறியதாக வளர்ந்து காணப்பட்டுள்ளது.

இதுபோன்ற வழக்குகள் உலகில் அரிதாகவே காணப்படுகின்றன, மற்றும் 10 இலட்சம் குழந்தைகளில் ஒருவருக்கு மட்டுமே ஏற்படுகின்றன. (4)

# ஹரி - மேகன் தம்பதியின் குழந்தைகளுக்கு அரச பட்டம்

## பக்கிங்ஹாம் அரண்மனை அறிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து மன்னர் சார்லசின் இரண்டாவது மகன் இளவரசர் ஹரி, இவர் அமெரிக்காவைச் சேர்ந்த, "டிவி" நடிகை மேகன் மார்கெலை காதலித்து, அரச குடும்பத்தின் ஒப்புதலோடு கடந்த 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர்.

அதன் பின்னர் அரச குடும்பத்துடன் அரண்மனையில் வசித்து வந்த இருவரும் கடந்த 2020 ஆம் ஆண்டு அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் என்ற பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அரச குடும்பத்தில் இருந்து வெளியேறிய அவர்கள் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர்.

ஹரி-மேக்ன் தம்பதிக்கு ஆர்ச்சி என்ற 3 வயது மகனும் லிலிபெட் என்ற 1 வயது மகளும் உள்ளனர். இந்த நிலையில் ஹரி-மேகன் தம்பதியின் குழந்தைகள் இருவரும் அரச குடும்பத்தின் அரச பட்டங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் இனி அவர்கள் முறையாக இளவரசர் ஆர்ச்சி, இளவரசி லிலிபெட் என அழைக்கப்படுவார்கள் என்றும் பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது. (4)

# 24 மணி நேரத்தில் 102 தாக்குதல் முறியடிப்பு

## உக்ரைன் தகவல்

(கீவ்)

கிழக்கு நகரமான பாக்முட்டைப் பாதுகாக்கும் உக்ரைனியப் படைகள், ரஷ்யாவின் ஊடுருவல் முயற்சிகளைத் தொடர்ந்து முறியடித்து வருகின்றன.

ஒகஸ்ட் மாதம் முதல் ரஷ்யப் படைகளின் முக்கிய நோக்கமாக இருக்கும் பாக்முட் நகரில் கடந்த 24 மணி நேரத்தில் 102 தாக்குதல்களை அதன் வீரர்கள் முறியடித்ததாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடந்த வியாழன் அன்று உக்ரைன் மீதான பாரிய தாக்குதலின் ஒரு பகுதியாக, ரஷ்யா ஆறு கின்சல் ஹைப்பர்சோனிக் க்ரூஸ் ஏவுகணைகளை ஏவியதாகவும் உக்ரைன் படைகள் நிறுத்த வழியில்லாமல் தடுமாறியதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (4)

# நாணய நிதியம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை

## பாகிஸ்தான் கவலை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானுக்கு கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் கடைப்பிடிக்கும் கடுமையான நிலைப்பாடு குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ - சர்தாரி கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒரு நேர்காணலில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு பேரழிவு, வெள்ளம் மற்றும் பயங்கரவாதத்தின் காரணமாக நாடு நெருக்கடிகளை [illegible] உள்ளது. சர்வதேச நாணய நிதிய [illegible] திட்டங்களுக்கும் கட்டமைப்பு வரி சீர்திருத்தத்தையும் பாகிஸ்தானால் அடைய முடியவில்லை.

எனவே இந்த அளவிலான இயற்கைப் பேரழிவால் நாங்கள் அவதிப்படும் போது, எங்கள் வரிக் கொள்கை மற்றும் வரி அதிகரிப்பு பற்றித் தெரிந்து கொள்ள இது சரியான நேரமா? என பிலாவல் கேள்வி எழுப்பி உள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து மேற்கு நாடுகள் வெளியேறியதைத் தொடர்ந்து 100,000 புதிய அகதிகளை கையாளும் பாகிஸ்தானுக்கு சர்வதேச நாணய நிதியம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை.

ஏழையாக உள்ள ஏழைகளுக்கு உதவ நாட்டிற்கு பணம் தேவைப்படும் நேரத்தில் உலகளாவிய கடன் வழங்குபவர் பேச்சுக்களை நீட்டிப்பதாக வெளியுறவு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அவர்களின் வரி சீர்திருத்தம் முழுமையடையாத வரை, நாங்கள் சர்வதேச நாணய நிதிய திட்டத்தை முடிக்க மாட்டோம் என்று கூறப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப்பிடிவாதத்துக்கு மூளையில்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை, அதனால் உணர முடியாது. ~ ஒகானல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவசொத்தை அழித்தால் அது தோசமாகத் திரளும்

அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த தன் மனைவி சீதையை மீட்பதற்காக இலங்கை மீது படையெடுத்து வந்த இராமபிரான், இராவண சேனையுடன் போரிட்டு வெற்றி கொள்கிறார்.

தவிர, இராமபிரானின் அஸ்திரத்தால் இராவணன் மாண்டு போகின்றான்.

சீதாப்பிராட்டியைக் கவர்ந்து வந்து இலங்கையில் சிறை வைத்த இராவணனை வதம் செய்தது அறம் சார்ந்தது என வாதிட்டாலும் சிவபக்தனாகிய இராவணேஸ்வரனைக் கொலை செய்ததன் காரணமாகத் தன்னைப் பிரமகத்தி தோசம் தீண்டும் என அஞ்சிய இராமபிரான், பிரமகத்தி தோசத்தினின்றும் விடுபடும் பொருட்டு சிவவழிபாடு செய்தார் என்கிறது இராமகாவியம்.

ஆக, சிவபக்தனாகிய இராவணன் அறம் மீறிய போதிலும் அவனைக் கொல்வது தோசத்துக்குரியது என்பதை அவதார புருசராகிய இராமபிரான் எடுத்தியம்புவதுதான் இங்கு நோக்குதற்குரியது.

ஆக, சிவபக்தனைத் தண்டிப்பது அவனுக்குத் தீங்கு செய்வது என்பன தோசமாகும் போது, சிவாலயத்தை இடித்து அழிப்பது சித்தர்களின் ஜீவசமாதிகளைத் துவம்சம் செய்வது என்பன எத்துணை பாவகாரியம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், சிவாலயத்தை இடித்தழிப்பது, சிவசொத்தை அபகரிப்பது, சிவபக்தர்களின் மடங்களை உடைப்பது என்பன மிகப்பெரும் பாவதோசமாக உருவெடுத்து காலக்கிரமத்தில் அது அந்த நாட்டை வறுமையிலும் பஞ்சத்திலும் உழலச் செய்யும்.

இந்த உண்மையை இன்னும் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்வதாக இல்லை.

ஆம், தற்போது கீரிமலையில் சிவாலயங்கள் மற்றும் மடங்கள் இடித்து அழிக்கப்பட்ட தகவல்களும் அந்த இடங்கள் கபளீகரம் செய்யப்பட்டிருப்பதான செய்திகளும் சைவ மக்களை கடுமையாகப் பாதித்துள்ளன.

சிவபக்தனாகிய இராவணேஸ்வரனால் ஆளப்பட்ட இலங்கைத் திருநாடு சிவபூமி எனப் போற்றப்படுவது.

இந்த நாட்டின் ஆதிச் சமயமாகிய சைவ சமயத்தை தொடர்ச்சியாக நிந்தனை செய்கின்ற கொடுமை இந்த நாட்டில் தொடர்கதையாகியுள்ளது.

அந்தவகையில், கீரிமலையில் சிவாலயம் இடிக்கப்பட்டும் மடங்கள் அழிக்கப்பட்டதுமான தோசம் இந்த நாட்டைத் தண்டிக்கத் தலைப்பட்டு விட்டதோ என்று எண்ணுகின்ற அளவிலேயே நாட்டின் நிலைமை உள்ளது.

எனவே செய்த கொடுஞ்செயல்களால் நாட்டுக்கு ஏற்பட்ட தோசத்தில் இருந்து மீள வேண்டுமாயின், உரிய இடங்களில் உரிய ஆலயங்களை மீளக் கட்டியெழுப்பி அங்கு சிவவழிபாடு நடப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவிடயத்தில் உதாசீனம் செய்யும் ஒவ்வொரு கணமும் ஆபத்தானவை என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டால் நல்லது.

## எரிபொருள் விலை குறைந்தால் பேருந்து கட்டணம் குறைக்கப்படும்

### பேருந்து உரிமையாளர் சங்கம்

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வரும் நிலையில், எரிபொருள் விலை குறைக்கப்பட்டால், ஜூன் மாதம் இடம்பெறவுள்ள பேருந்து கட்டண திருத்தத்தில், கட்டணக் குறைப்பு இடம்பெறக் கூடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கருத்தொன்றை முன்வைத்துள்ளார்.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலேயே, தேசிய பேருந்து கட்டண சூத்திரம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

“டொலரின் பெறுமதி மற்றும் பணவீக்கத்தின் அடிப்படையில், இந்த நிலைமை அவதானிக்கப்படுகிறது. இதற்கமைய, பணவீக்கம் குறைவடையுமாயின், பேருந்து கட்டணமும் நிச்சயமாக குறைவடையும் என்ற எண்ணக்கரு உள்ளது.

விலை தளம்பல் குறித்து, நாளாந்தம் ஆய்வு செய்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ம-7)

## வவுனியாவில் குடும்பமாக மர்ம மரணம்

## பகுப்பாய்வு அறிக்கையின் பின்பே மரணத்திற்கான காரணம் தெரியும்

### பொலிஸார் தெரிவிப்பு

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் மரணம் தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கை வந்த பின்னரே மரணத்திற்கான காரணத்தை கூற முடியும் என வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த செவ்வாய்கிழமை காலை தம்பதிகள் மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர்.

வவுனியா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற்கூற்று பரிசோதனை புதன்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட போதிலும், மரணத்திற்கான சரியான காரணம் வெளியாகவில்லை. ஆனால் அவர்கள் நஞ்சு அருந்தவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, உயிரிழந்தமைக்கான சரியான காரணத்தை கண்டறிய உடல் உறுப்புகள் மற்றும் இரத்த மாதிரிகள் அரசாங்க மரண விசாரணை திணைக்களம் மற்றும் மருத்துவ ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் முடிவுகள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும். அதன் முடிவுகள் வந்த பின்னரே மரணத்திற்கான காரணத்தை கூற முடியும். குறித்த சம்பவம் தொடர்பில் சிசீரீவி காட்சிகள் மற்றும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக்வும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

## சாவகச்சேரியில் வீடு உடைப்பு பெண் உட்பட இருவர் கைது

சட்டவிரோதமாக உள்நுழைந்து வீடொன்றை உடைத்து தரைமட்டமாக்கிய குற்றச்சாட்டின் பேரில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் சாவகச்சேரி நகரில் நேற்று இடம்பெற்றுள்ளது.

JCB இயந்திரத்தைப் பயன்படுத்தி குறித்த வீடு உடைக்கப்பட்டுள்ளது.

காணி உரிமைப் பிரச்சினையே சம்பவத்திற்கான காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டை உடைக்க பயன்படுத்திய JCB இயந்திரத்தையும் சந்தேகநபர்களையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-7)

## மார்ச் மாதம் முதல் 6 நாட்களுக்குள்

## 25 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை

(கொழும்பு)

இந்த மாதத்தின் முதல் 6 நாட்களுக்குள் சுமார் 25 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து 8ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஜீவன பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 இலட்சத்து 34 ஆயிரத்துக்கு அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இது 9.6 சதவீத அதிகரிப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதத்தின் இது வரையான காலப்பகுதியில் இலங்கை வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் அடிப்படையில் இலங்கையின் முதல் மூன்று ஆதார சந்தைகளாக ரஷ்யா, இந்தியா மற்றும் ஜேர்மன் ஆகியன உள்ளன. (ம-7)

## பொலிஸார் என தெரிவித்து கொள்ளையில் ஈடுபட்டோர் கைது

கொழும்பில் பொலிஸார் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், நபர்களை அச்சுறுத்தி அவர்களிடமிருந்து தொலைபேசிகள் மற்றும் மடிக்கணனிகள் உள்ளடங்களாக 90 உபகரணங்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்ட இருவரை வட கொழும்பு பிரிவின் குற்றப் புலனாய்வு பிரிவினர் கொழும்பு முகத்துவாரம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறித்த இருவர் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எப்பல்ரக தொலைபேசிகள் 37, 47 ஸ்மார்ட் தொலைபேசிகள், 5 மடிக்கணனிகள், இரண்டு ரப்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த இருவராலும் கொள்ளையடித்ததாகக் கூறப்படும் மேலும் பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-7)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் வேலைவாய்ப்புக்கான ஆங்கிலம் (English for Employment) 5 மாதக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 20.03.2023 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று அல்லது https://ou.ac.lk/engforempol/ என்ற இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

## தேசிய சட்ட மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பம்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் நடத்தப்படும் தேசிய சட்டமாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது.

“நெருக்கடியின் ஊடாக வழிசெலுத்தல் - சட்டத்தின் பங்கு” என்ற தலைப்பில் கொழும்பில் இன்றும் நாளையும் இந்த மாநாடு இடம் பெறவுள்ளது.

இதன் பிரதம அதிதியாக பிரதம நீதியரசர் ஜயந்தஜயசூரியவும் கௌரவ அதிதியாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங்கும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாடு பல அமர்வுகளாக பிரிக்கப்பட்டு இடம்பெறவுள்ளது. அவை ஒவ்வொன்றின் போதும் நெருக்கடியின் ஊடாக வழிநடத்துதல் மற்றும் அதில் சட்டத்தின் பங்கு என்பன குறித்து கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
## ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளிற்கான வைப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல் - 2023

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மக்களிடமிருந்து ஆனையிறவு வணிக சுற்றுலா மைய கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 13.03.2023 தொடக்கம் 27.03.2023 ஆம் திகதி வரை (அலுவலக நாட்களில் மு.ப 9.00- பி.ப 01.00 வரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :- 28.03.2023 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :-28.03.2023 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம்.

ஆனையிறவு கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | விபரம் | வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | கருவாட்டுக் கடை | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 02 | கடை இல 02 | உள்ளூர் உற்பத்தி (உலர் உணவு) | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 03 | கடை இல 03 | உள்ளூர் உற்பத்தி (உலர் உணவு) | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 04 | கடை இல 05 | பனைசார் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 05 | கடை இல 06 | பழக்கடை | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர் / செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 28.03.2023 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 28.03.2023 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சிக்கு சமுகமளித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
5. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளர் / செயலாளரிற்கு பூரண அதிகாரமுண்டு.
8. சித்திரக் குத்தகைதாரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.
9. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன்,மகள்).
10. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
11. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
12. சித்திகர கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
13. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
14. இவ் ஒப்பந்தம் தொடர்பாக சபையின் தவிசாளர் / செயலாளரின் எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ / செயலாளரிற்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
15. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேச சபையின் உபஅலுவலகம் முரசுமோட்டையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அருணாசலம் வேழமாலிகிதன்**
**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-6140)

# உணவகத்திற்கு மட்டும் பிரதேச சபை அனுமதி

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் உணவுடன் கூடிய மதுபான சாலை இயங்கும் நிலையில் கரைச்சி பிரதேச சபையினால் உணவகத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயனில் மதுபான சாலை திறப்பதற்கு முன்னர் தனிநபரான முருகையா இராசலிங்கம் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதற்கு பொது அமைப்புகள் ஆதரவு வழங்கிஇருந்தன. இம் மதுபானசாலை,பாடசாலைகள், ஆலயங்கள், பொது இடங்கள் உள்ள சூழலில் மக்கள் குடியிருப்பு மத்தியில் அமைந்திருப்பதன் காரணமாக வேறு இடத்திற்கு மாற்றுமாறே தனிநபர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

பின்னர் கரைச்சி பிரதேச செயலாளர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவரை சந்தித்த நிலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டவர் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் 13.02.2023 இல் கரைச்சி பிரதேச சபையிடம் மதுபானசாலை இயங்குவதற்கு வழங்கப்பட்ட அனுமதி தொடர்பாக பல கேள்விகளுக்கு விடைகளை இரு வாரங்களுக்குள் வழங்குமாறு கோரி இருந்த நிலையில் 07.03.2023 பிரதேச சபையினால் தனிநபருக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதம் 09.03.2023 இல் கிடைக்கப்பெற்றது இக்கடிதத்தில் உணவகத்திற்கு மட்டுமே 2022 இல் அனுமதி வழங்கப்பட்டதாகவும் 2023 ஆம் ஆண்டுக்கான எந்த அனுமதிகளும் குறித்த உணவுடன் கூடிய மதுவிற்பனை நிலையத்திற்கு வழங்கப்படவில்லை என தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பிரதேச சபையினால் பதில் வழங்கப்பட்டுள்ளது. (4-350)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்பு
காணி விற்பனைக்கு
- மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவ்டி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்
076 436 5814
(14863)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 120 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 300 | 350 |
| தக்காளி | 120 | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| கோவா | 50 | 100 | 80 | 120 |
| கரட் | 120 | 180 | 140 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 180 | 160 | 240 |
| வாழைக்காய் | 180 | 150 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 350 | 260 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 160 |
| பயற்றங்காய் | 250 | 200 | 300 | 250 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 250 |
| பீற்றூட் | 240 | 200 | 200 | 240 |
| கறிமிளகாய் | 400 | 200 | 350 | 350 |
| முருங்கைக்காய் | 1600 | 1600 | 1500 | 1600 |
| போஞ்சி | 240 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 180 | 240 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 300 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-100 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறியதாக குற்றம்சாட்டப்பட்ட சில இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மை அல்லது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் ஏற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறது என்பது குறித்த மீளாய்வுக்கூட்டத்தில் குறித்த குழு முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்தோடு அரச அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் கொண்டிருந்த நிபுணத்துவத்தின் அடிப்படையில் அதற்கு தகுதி பெற்றிருந்தார்கள் என்றும் ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார். (ம-7)

## மருத்துவபீட...

லக்சிகன் (வயது - 26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் 2016ம் ஆண்டு உயர்தர விஞ்ஞானப் பிரிவில் 3ஏ எடுத்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்று மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியிருந்தார்.

குறித்த மாணவனின் தந்தை ஒரு பிரபல மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## இராணுவத்...

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் இலங்கை தொடர்பான 6ஆவது மீளாய்வுக் கூட்டத்தொடர் கடந்த 8 - 9ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மிகமோசமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வுகள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு, தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் மேற்கொள்ளப்படும் அநாவசியமான தலையீடுகள், நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையில் நிறைவேற்றதிகாரத்தின் பங்கு என்பன தொடர்பிலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு தமது திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளது.

போர்க்குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான மீறல்களும் உள்நாட்டு சட்டத்தில் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா? என்று மனித உரிமைகள் மீளாய்வுக்குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் வினவினர். (ம-7)

## தேர்தலுக்கான...

நிதி விடுவிப்பு விவகாரத்தில் நிதி அமைச்சரின் அனுமதி அவசியம் என திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தியதை தொடர்ந்து ஜனாதிபதிக்கு எழுத்துமூலமாக கோரிக்கைய முன்வைத்துள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை வழங்குமாறு வலியுறுத்தி கடந்த 07ஆம் திகதி திறைசேரியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்தோம். நிதி விடுவிப்பு விவகாரத்தில் நிதி அமைச்சரின் அனுமதி அவசியம் என அவர் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நிதியை வழங்குமாறு நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நிதி தாமதமின்றிய வகையில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கிறோம் என்றார். (ம-7)

## 7 அத்தியாவசிய...

நாட்டிற்கு கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மருத்துவ விநியோகத் துறையில் சுமார் 150 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

முற்பதிவு செய்யப்பட்ட மருந்து வகைகள் இம்மாத இறுதிக்குள் கிடைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

. ஆசிய அபிவிருத்தி வங்கியூடாகவும் மருந்து வகைகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவை அனைத்தும் தொற்றா நோய்களுக்கான மருந்துகள் எனவும் சுகாதார இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் குறிப்பிட்டார். (ம-7)

## தேர்தலை ஒத்தி...

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இதற்கு முன்னர் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் இருபத்து இரண்டு தடவைகளுக்கு மேல் முயற்சித்துள்ளதாகவும்,

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் ஒரே நோக்கம் தேர்தலை நடத்தாதிருப்பதே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

மக்களுக்கு தங்களின் ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைக்காவிடின் ஜனநாயகம் சீர்குலைந்து போகும் எனத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், ஜனநாயகத்தை சீர்குலைக்கவா அரசாங்கம் முயற்சிக்கிறது எனவும் கேள்வி எழுப்பினார்.

எதிர்ப்பு மற்றும் போராட்டங்களை அடக்குவதற்கு அரசாங்கம் கண்ணீர் புகை பிரயோகங்களைப் பிரயோகிப்பது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க் கட்சித் தலைவர், நச்சுத் தன்மை வாய்ந்ததாக இருந்தாலும், நச்சுத்தன்மையற்றதாக இருந்தாலும் மக்கள் போராட்டத்தின் மீது கண்ணீர்ப் புகை பிரயோகங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு எத்தகைய உரிமையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## பெருமை பேசிய...

பகுதியில் இடம்பெற்ற மது விருந்தொன்றில், மது அருந்திய நிலையில் இருவர் தாம் செய்த திருட்டை பற்றி, விருந்தில் கூடியிருந்தவர்கள் மத்தியில் பெருமையாக பேசிக் கொண்டனர். அதன்போது, விருந்தில் கலந்து கொண்டிருந்த நபர் ஒருவர் அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் அளித்த நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த சில தினங்களுக்குமுன் கூலி வேலை செய்துள்ளனர்.

அதன்போது, வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த 5 பவுண் தங்க சங்கிலி ஒன்றினை நூதன முறையில் திருடியுள்ளனர். அந்த திருட்டினையே மது விருந்தில் பெருமையாகப் பேசியுள்ளனர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதனையடுத்து பொலிஸார் குறித்த வீட்டுக்கு சென்று சம்பவம் தொடர்பில் கூறியபோதே, வீட்டாருக்கு தங்கள் நகை களவு போன விடயம் தெரியவந்துள்ளது. (ம-7,33)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 11/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1511
வெற்றி இலக்கங்கள்
மீனம் 3 6 9 9 4 9
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.03.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1086
X 09 26 41 75
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

திகதி 2023.03.11 | சீட்டிழுப்பு இலக்கம் 3298
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
S 17 23 35 39
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 11/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1404
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
K 05 26 50 58 80

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.11
சீட்டிழுப்பு இலக்கம் 365
வெற்றி இலக்கங்கள்
கடகம் 44 53 54 61 கடகம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 5056
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
V 2 5 4 6 3 3
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2031 | நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.11 | தினம் சனிக்கிழமை
J 24 42 57 60
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,885,180/-
DLB www.dlb.lk

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.11
சீட்டிழுப்பு இல : 4192
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,033,960/-
வெற்றி இலக்கங்கள் 02 30 38 53
ஆங்கில எழுத்து F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,642,560/-
திகதி 2023-03-11
வெற்றி வாரம் 3743
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 10 23 43 கும்பம்
ரூ.500/- பரிசுகளுக்கான 4342
ரூ.100/- பரிசுகளுக்கான 158
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,075,980/-

### சுப்பர் லக்கி

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 15 28 38 73 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1207
வர்ணம் சிவப்பு
திகதி 2023.03.11 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 312,571,516.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 578 | திகதி 2023-03-11 | வர்ணம் செம்மஞ்சள்
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 02 56 68 | விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,951,612/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1857
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,881,420/-
வெற்றி இலக்கங்கள் 11 30 32 46
ஆங்கில எழுத்து M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

## 30% விலைக்கழிவில்



- அழகுசாதன பொருட்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- கவரிங் நகைகள்
- சோடினை சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- மணிக்கூட்டு வகைகள்
- கிறீம் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாட்டா வகைகள்
- தையல் உபகரணங்கள்
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்

**என்பன கொழும்பு விலையில் விற்பனைக்கு உண்டு.** (14846)

## சரவணபவன் பென்சி கவுஸ்

இல.26/1,
ஜும்மா பள்ளிவாசல்
வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)
077 468 3354

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6145)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

### EXECUTIVE OFFICER



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6145)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 076 097 3127

## வேலையாட்கள் தேவை

No.226, Main Street, Jaffna எனும் இடத்தில் இயங்கி வருகின்ற **VVmart and Construction** க்கு உடனடி பணியாளர்கள் தேவை.

1. Assistant Manager (Degree படித்தவர்கள்)
2. Clerk (O/L, A/L படித்தவர்கள்)
3. Sales Girls And Boys (O/L, A/L)

வயது எல்லை (21 - 35)
கட்டாயமாக சுய விபரக்கோவையுடன் வருகை தரவும்.

**T.P : 077 555 2142 / 074 016 5425** (14856)

## தனா பியூட்டி பஷன்

அழகுக்கலை வகுப்புக்கள் தனியாக மற்றும் குழுவாக நடைபெறுகின்றன. ஆர்வமுள்ளவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.
தொடர்புகளுக்கு
**077 601 8563**
No.101, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (14852)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதி களுடைய Accounts Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு :-
**077 367 1062** (14871)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை உடுக்கியவளை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
**077 819 1314** (14785)

## கடன் வசதி

நீங்கள் வியாபாரம் ஒன்று நடத்துபவரா? அப்படியானால் உங்களுக்கு தேவையான கடன் வசதி எம்மால் பூர்த்தி செய்ய முடியும் வட்டி 5% மட்டும் இது நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மட்டும்.
SJ FINANCE
**077 473 7737** (14874)

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் புத்தூரில் 82 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14837)

**074 318 7263 | 076 755 8606**

## காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்ப நாயகம் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
**075 599 1097** (14849)

## Pickme Taxi சேவை

வடக்கில் உள்ள உங்கள் வாகனத்தை எமது Pickme Taxi சேவையுடன் இணை யுங்கள். அதிக வருமானம் பெறலாம்
அழைக்கவும்
**077 473 7737**
(முதல் 100 வாகனம் இலவசமாக பதியலாம்) (14874)

## உணவு பொருட்கள் மலிவு விலையில்

Noodles, Soya Meat, Juice வகை, கொக்கிஸ், மிளகாய்த்தூள், கறித் தூள், மஞ்சள், கட்டை மிளகாய்த்தூள் என அனைத்து வகை பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் சிறந்த விலைக் கழிவில் 20%-30%
**077 473 7737**
**076 366 7737** (14874)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி போன்ற பிரதான வீதிகளை அண்மித்த பகுதிகளில் நல்ல சுற்றுப்புறச்சூழலில் மூன்று (03) அல்லது நான்கு (04) அறைகள் மற்றும் இரண்டு (02) குளியலறைகள் கொண்ட வீடொன்று வாடகைக்குத் தேவை. குறைந்தபட்சம் இரண்டு வருட வாடகைக்காலம் மற்றும் நியாயமான வாடகை எதிர்பார்க்கப்படுகின்றது.
**075 571 7376** (14869)

## மணமகள் தேவை

யாழ். புலோலி இந்து, கௌரவ குடும்பம் 1978 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றம் அற்ற Finlandஇல் தொழில் புரியும் மணமகனுக்கு A/L படித்த Finland செல்ல விரும்பும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
**+94 77 999 2440**
**+94 74 113 2440** (14872)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பொற்பதி வீதியிலுள்ள செருக்கபுலம் ஒழுங்கையில் 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**077 233 8321 / 077 540 8208** (14857)

## இராஜ மருத்துவம்

வாதம், குத்துளைவு, பாரிசவாதம், கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு, சளி, தும்மல், பீநசம், நீரிழிவு, கொப்பவாயு, நெஞ்சுக்குத்து, இளநரை, சொடுகு, மயிர் வளர்ச்சியின்மை, நித்திரையின்மைக்கு சிகிச்சை பெற பேரறிஞர் DR.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர் T.P : 076 274 4488
[illegible]

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970** (14739)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.